திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

2026 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வியாழக்கிழமை நாள் 08.10.2026 காலை 10.30 மணியளவில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி காமராஜ் மன்றம் ஏ.எஸ்.ஜி. லூர்துசாமி கூட்ட மண்டபத்தில் பின்வரும் பொருள்களைப் பற்றி சாதாரணக்கூட்டம் நடைபெறும்.

நிகழ்ச்சி நிரல்

பொருள்: 1 (27.08.2026ந் தேதி நடைபெற்ற மாமன்ற சாதாரணக் கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள் எண்: 64)

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மண்டலம்–4 வார்டு எண். 57 (பொன்மலைக் கோட்டம்), பிராட்டியூர் கிழக்கு **கிராமம், நகரபுல எண் 107/4, வார்டு AL, பிளாக் எண் 27 – ல்** கட்டுப்பட்ட 0.45 **ஏக்கர் (1817.40 ச.மீ.)** பரப்பளவு கொண்ட இடத்தில் உத்தேசித்துள்ள 14 குடியிருப்புகள் கொண்ட மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் மாவட்ட ஊரமைப்பு அலுவலகம் , திருச்சிராப்பள்ளி மாவட்டம் அவர்களின் இணையதள செயல் முறை ந.க.எண் SWP/KL55SQMA/65082/2026/2026/TCP, நாள் 25.06.2026ல் மனைப்பிரிவிற்கு மனைப்பிரிவு அனுமதி எண். 157/2026 என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப ஒப்புதல் மனுதாரர் திரு. J.P. ரதி அவர்களுக்கு வழங்கப்பட்டு மேல் நடவடிக்கைக்காக மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் இருந்து திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு உத்தேச மனைபிரிவு இறுதி ஒப்புதலுக்காக வரப்பெற்றுள்ளது.

மேற்படி மனைப்பிரிவின் வரைபடத்தில் கண்டுள்ள 626.11 ச.மீ பரப்பு சாலைகள், மூலை முடக்கு உட்பட, 6.54 ச.மீ பரப்பு பொது உபயோக இடம், தானசாசன பதிவு எண். 3711/2026, நாள்.16.06.2026–ன் மூலம் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையாளருக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டும் மற்றும் 6.66ச.மீ பரப்பு மின் பகிர்மான கழகத்திற்கான திறவிடம் தானசாசன பதிவு எண். 3806/2026, நாள்.19.06.2026–ன் மூலம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மேற்பார்வை பொறியாளர் அவர்களுக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மாநகராட்சி ஆணையர் பெயரில் மனுதாரர் தமது சொந்த செலவில் பட்டா மாறுதல் மேற்கொள்ள வேண்டும்.

மேற்படி இடத்தில் உத்தேசித்துள்ள 14 மனைகள் கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவிற்கு விண்ணப்பதாரரால் அரசாணை எண். 181 நாள். 09.12.2020 –ன் படியும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 12843/2022 டிபி –2 நாள். 20.10.2022 – ன் படி சாலை வசதி, குடிநீர் குழாய் மற்றும் மழைநீர் வடிகால் வசதி, தெருவிளக்கு மற்றும் பாதாள சாக்கடை ஆகிய பணிகளை முறையாக அமைக்கப்பட்டு இப்பணிகளுக்கு மூன்றாம் நபர் தர பரிசோதனை சான்று பெறப்பட்ட பிறகு இறுதி ஒப்புதல் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையாளர் அவர்களால் வழங்கப்படும்.

எனவே, அரசாணை எண். 181 நாள். 09.12.2020 –ன் படியும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 12843/2022 டிபி –2 நாள். 20.10.2022 – ன் படியும், மேற்படி சாலைகள் மற்றும் பொது உபயோக இடம் ஆகியவற்றை தானமாக பெறப்பட்டதற்கு நகர் ஊரமைப்பு துறையின் நிபந்தனைகளுடன் 14 மனைகள் கொண்ட உத்தேச மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மேற்படி உத்தேச மனைப்பிரிவின் வரைபடத்திற்கு ஒப்புதலளித்து, இறுதி மனைப்பிரிவு அங்கீகார உத்தரவு வழங்கிட, மாமன்றம் உரிய ஒப்புதல் வழங்கலாம்.

(எப்1/5530/2026/வா.கு.அ.4)

தீர்மானம் எண்.580 பொருள்: 1 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள்: 2

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில், கீழ்கண்டுள்ள பணிகளை பொதுநிதி 2026–27ன் கீழ் மேற்கொள்வதற்கு, ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.19/2026–27ன் வாயிலாக 13.08.2026ம் தேதியன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், ஆன்லைன் வாயிலாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

வ. எண்.	வேலையின் விபரம்	வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (திருவாளர்கள்)	குறிப்பு
(1)	(2)	(3)	(4)
1.	மண்டலம் எண்.1, வார்டு எண்கள்.1, 2, 3, 4, 5, 6, 12, 13, 14, 15 மற்றும் 21க்குட்பட்ட பகுதிகளில் பழுதடைந்துள்ள தார் சாலைகளை தார்பேட்ச் கொண்டு சீரமைக்கும் பணி. மதிப்பீட்டு ரூ.39.45 இலட்சம். இ8/7690/2026(மை)	1. M/s. வேலன் பில்டர்ஸ் பி.லிட்., திருச்சி. 21.00% குறைவு. 2. திரு. ஜி. கண்ணன், திருச்சி. 0.09% குறைவு. 3. திரு. ஜெ. நாகராஜ், திருச்சி. 0.50% அதிகம்.	வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப் புள்ளிகளில், M/s. வேலன் பில்டர்ஸ் பி.லிட்., திருச்சி ஒப்பந்தக்காரர், மதிப்பீட்டைக் காட்டிலும் 21.00% குறைவான விலை விகிதத்தில் இப்பணியினை செய்து தருவதாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதாலும், இப்பணி உடனடியாக மேற்கொள்ள வேண்டிய பணியாக இருப்பதால், கூடுதல் முன்வைப்புத் தொகையாக ரூ.3,46,231/– ஐ (குறைவான விலை விகிதத்தில் 5 சதவீதத்திற்கு கூடுதலாக உள்ளதால், கூடுதல் வித்தியாசத் தொகை) வங்கி வரைவோலையாக இம்மாநகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத் துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

2.	மண்டலம் எண்.2, வார்டு எண்கள்.17, 18, 20, 30, 31, 32, 33,34,47,48மற்றும்49க்குட்பட்ட பகுதிகளில் பழுதடைந்துள்ள தார் சாலைகளை தார்பேட்ச் கொண்டு சீரமைக்கும் பணி. மதிப்பீட்டு ரூ.27.50 இலட்சம். இ3/7689/2026(மை)	1. M/s. வேலன் பில்டர்ஸ் பி.லிட்., திருச்சி. 21.00% குறைவு. 2. திரு. ஜி. கண்ணன், திருச்சி. 2.00% அதிகம் 3. திரு. ஜெ. நாகராஜ், திருச்சி. 0.10% குறைவு.	வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப் புள்ளிகளில், M/s. வேலன் பில்டர்ஸ் பி.லிட்., திருச்சி ஒப்பந்தக்காரர், மதிப்பீட்டைக் காட்டிலும் 21.00% குறைவான விலை விகிதத்தில் இப்பணியினை செய்து தருவதாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதாலும், இப்பணி உடனடியாக மேற்கொள்ள வேண்டிய பணியாக இருப்பதால், கூடுதல் முன்வைப்புத் தொகையாக ரூ.2,29,656/- ஐ (குறைவான விலை விகிதத்தில் 5 சதவீதத்திற்கு கூடுதலாக உள்ளதால், கூடுதல் வித்தியாசத் தொகை) வங்கி வரைவோலையாக இம்மாநகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிந்துரைத் துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.
3.	மண்டலம் எண்.3, வார்டு எண்கள்.16, 35, 36, 37, 38, 39, 40, 41, 42, 43, 44, 45 மற்றும் 46க்குட்பட்ட பகுதிகளில் பழுதடைந்துள்ள தார் சாலைகளை தார்பேட்ச் கொண்டு சீரமைக்கும் பணி. மதிப்பீட்டு ரூ.37.50 இலட்சம். இ3/7692/2026(மை)	1. M/s. வேலன் பில்டர்ஸ் பி.லிட்., திருச்சி. 21.00% குறைவு. 2. திரு. எஸ். ராஜ்மோகன், திருச்சி. 0.50% குறைவு. 3. திரு. ஜி.ஜி. சக்திவேல், திருச்சி. 0.30% குறைவு.	வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப் புள்ளிகளில், M/s. வேலன் பில்டர்ஸ் பி.லிட்., திருச்சி ஒப்பந்தக்காரர், மதிப்பீட்டைக் காட்டிலும் 21.00% குறைவான விலை விகிதத்தில் இப்பணியினை செய்து தருவதாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதாலும், இப்பணி உடனடியாக மேற்கொள்ள வேண்டிய பணியாக இருப்பதால், கூடுதல் முன்வைப்புத் தொகையாக ரூ.3,29,473/- ஐ (குறைவான விலை விகிதத்தில் 5 சதவீதத்திற்கு கூடுதலாக உள்ளதால், கூடுதல் வித்தியாசத் தொகை) வங்கி வரைவோலையாக இம்மாநகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.
4.	மண்டலம்-4, வார்டு எண்.57, 58,60,61,63,64க்குட்பட்ட பழுதுடைந்துள்ள தார் சாலைகளை தார்பேட்ச் கொண்டு சீரமைக்கும் பணி மதிப்பீடு ரூ.40.27 இலட்சம் **இ4/7691/2026/மையம்**	1. M/S . சந்துரு &கோ ., திருச்சி 23.00% குறைவு 2. திரு.S.ராஜ்மோகன் திருச்சி 0.30% குறைவு 3. திரு.G.G.சக்திவேல் திருச்சி 0.60% குறைவு	வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப் புள்ளிகளில், M/s. சந்துரு & கோ, திருச்சி ஒப்பந்தக்காரர், மதிப்பீட்டைக் காட்டிலும் 23.00% குறைவான விலை விகிதத்தில் இப்பணியினை செய்து தருவதாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதாலும், இப்பணி உடனடியாக மேற்கொள்ள வேண்டிய பணியாக இருப்பதால், கூடுதல் முன்வைப்புத் தொகையாக ரூ.3,87,890/- ஐ (குறைவான விலை விகிதத்தில் 5 சதவீதத்திற்கு கூடுதலாக உள்ளதால், கூடுதல் வித்தியாசத் தொகை) வங்கி வரைவோலையாக இம்மாநகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

5.	மண்டலம் எண்.5, வார்டு எண்கள்.8, 9, 10, 11, 22, 23, 24, 26, 27 மற்றும் 28க்குட்பட்ட பகுதிகளில் பழுதடைந்துள்ள தார் சாலைகளை தார்பேட்ச் கொண்டு சீரமைக்கும் பணி. மதிப்பீட்டு ரூ.28.55 இலட்சம். இ6/7672/2026(மை)	1. M/s. வேலன் பில்டர்ஸ் பி.லிட்., திருச்சி. 21.00% குறைவு. 2. திரு. டி. சிவகுமார், திருச்சி. 0.09% குறைவு. 3. திரு. ஆர். ஜேக்கப், திருச்சி. 2.00% அதிகம்.	வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப் புள்ளிகளில், M/s. வேலன் பில்டர்ஸ் பி.லிட்., திருச்சி ஒப்பந்தக்காரர், மதிப்பீட்டைக் காட்டிலும் 21.00% குறைவான விலை விகிதத்தில் இப்பணியினை செய்து தருவதாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதாலும், இப்பணி உடனடியாக மேற்கொள்ள வேண்டிய பணியாக இருப்பதால், கூடுதல் முன்வைப்புத் தொகையாக ரூ.2,50,916/–ஐ (குறைவான விலை விகிதத்தில் 5 சதவீதத்திற்கு கூடுதலாக உள்ளதால், கூடுதல் வித்தியாசத் தொகை) வங்கி வரைவோலையாக இம்மாநகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

அலுவலக குறிப்பு :

1. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகள் அத்தியாவசிய பணியாக இருப்பதாலும், இப்பணி உடனடியாக மேற்கொள்ளவேண்டிய பணியாக இருப்பதாலும், திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 2000 பிரிவு 14(1)ன் கீழ், மதிப்பீட்டைக் காட்டிலும் மிக குறைவான விலை விகிதத்தினை, பத்தி எண்.4ல் கண்டுள்ள காரணங்களை முன்னிட்டு ஏற்கலாம்.
2. நிர்வாக நலன் கருதியும் இப்பணியின் அவசர அவசியம் கருதியும் உடனடியாக இப்பணியினை மேற்கொள்வதற்கு வேலை உத்திரவு வழங்கி பணி துவங்கப்பட்டதற்கும் அனுமதி வழங்கலாம்.

இ8(மை)/7690/2026

தீர்மானம் எண்.581 பொருள்: 2 வரிசை எண்.4 வேலையின் விவரத்தில் மண்டலம்4ல் விடுபட்ட வார்டுகளான 53,54,56,62 மற்றும் 65 ஆகிய வார்டுகளை சேர்த்தல், வரிசை எண்.5 வேலையின் விவரத்தில் மண்டலம்5ல் விடுபட்ட வார்டுகளான 25 மற்றும் 55 ஆகிய வார்டுகளை சேர்த்தல் என்ற திருத்தத்துடன் அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள்: 3

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் IV & Vக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மொத்தம் 6 எண்ணிக்கைகள் கழிவுநீர் உந்துநிலையங்களை 01.08.2025 முதல் 31.07.2026 வரை இயக்கி பராமரிக்கும் பணிகளை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.19.10 இலட்சத்திற்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு மேற்படி பணியை மெசர்ஸ். பவர் எலெக்ட்ரிகல் ஓர்க்ஸ், திருச்சி நிறுவனம் பராமரித்து வருகின்றனர். இந்நிலையில் மேற்படி பராமரிப்பு பணிக்கான காலம் வரும் 31.07.2026ல் முடிவடைவதாலும், மாமன்ற தீர்மானம் எண்: 114 நாள்: 28.03.2025ன் அலுவலககுறிப்பு 3ல் குறிப்பிட்டுள்ள படி மேற்படி நிறுவனம் நல்ல முறையில் இயக்கி பராமரிக்கும் பணி செய்து வருவதாலும் மீண்டும் இதே நிறுவனத்தாருக்கு ஓராண்டு காலம் ஒப்பந்த கால நீட்டிப்பு செய்ய இசைவு கடிதம் கொடுத்துள்ளதாலும், மேற்படி ஒப்பந்ததாரருக்கு காலநீடிப்பு செய்து மேற்படி கழிவுநீர் உந்துநிலையங்களை ஓராண்டிற்கு இயக்கி பராமரிக்க ஏற்கனவே வழங்கப்பட்ட கட்டணத் தொகையுடன் 10.0% கூடுதலாக தயார் செய்து விவரம் கீழ்க்கண்ட அட்டவணையில் தெரிவிக்கப்படுகிறது.

வ. எண்	வார்டு குழு அலுவலகம் விபரம்	கழிவுநீர் உந்துநிலையங்களின் விபரம்	மின்மோட்டார் களின் விபரம்	ஒரு ஆண்டிற்கான பராமரிப்பு தொகை மதிப்பீடு ரூ.
1	வார்டுகுழுஅலுவலகம் – IV	ராஜாகாலனி	10 HP x 2 No's	21.01
2	வார்டுகுழுஅலுவலகம் – V	ஜெயமங்களம்	3 HP x 2 No's	
3	வார்டுகுழுஅலுவலகம் – V	அண்ணாமலைநகர்	20 HP x 2 No's	
4	வார்டுகுழுஅலுவலகம் – V	வெக்காளிம்மன்நகர்	7.5 HP x 2 No's	
5	வார்டுகுழுஅலுவலகம் – V	பாத்திமாநகர்	3 HP x 2 No's	
6	வார்டுகுழுஅலுவலகம் – V	சிவாநகர்	15 HP x 2 No's	

எனவே, மெசர்ஸ். பவர் எலெக்ட்ரிகல் ஓர்க்ஸ், திருச்சி நிறுவனமே மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ளபடி ரூ.21.01 இலட்சம் மதிப்பீட்டில் மேற்படி 6 எண்ணிக்கை கழிவுநீர் உந்துநிலையங்களை இயக்கி பராமரிக்கும் பணிகளை மேற்கொள்ள கால நீட்டிப்பு செய்ய (01.08.2026 முதல் 31.07.2027 வரை) அனுமதி அளிக்க மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது..

அலுவலகக்குறிப்பு

1. மேற்படி6எண்கள் சாலையோர கழிவு நீர் உந்து நிலையங்களை மாநகராட்சி பொறுப்பில் எடுத்து தனியார் வசம் ஒப்படைத்து இயக்கி பராமரிக்க அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட 6எண்கள் சாலையோர கழிவு நீர் உந்து நிலையங்களை இயக்கி பராமரிக்கும் பணிகளை மேற்கொள்ள கால நீட்டிப்பு செய்ய (01.08.2026 முதல் 31.07.2027 வரை) மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.
3. இச்செலவினத்தை 2026–27 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் கழிநீர் அகற்றல் மற்றும் பராமரிப்பு செலவினங்கள் என்ற தலைப்பின் கீழ் (2305010) ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

இ6/2749/2025 (மையம்)

தீர்மானம் எண்.582 பொருள்: 3 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள்: 4

இயக்குநர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 5282 / 2026 /எச்2 நாள். 04.03.2026இல் நகர சுகாதார செவிலியர் மற்றும் பகுதி சுகாதார செவிலியர்களுக்கு சீருடைப்படியானது அரசாணை (நிலை) எண். 306 நிதித்துறை நாள். 13.10.2017இல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு ரூ.1000/– இருந்து ரூ.2000/– ஆக உயர்த்தி வழங்கிட தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத்தொடர்ந்து, இம்மாநகராட்சி மைய அலுவலகம் பொதுசுகாதாரப்பிரிவின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரிந்து வரும் நகர சுகாதார செவிலியர்களுக்கு 2025–26 ஆம் ஆண்டு சீருடைப்படி ரூ.1000/– இருந்து ரூ.2000/– ஆக உயர்வு செய்து வழங்கிடபடும். நகர சுகாதார செவிலியர்களின் விவரம் கீழ்கண்டுள்ளவாறு.

வ. எண்	பணியாளர்களின் பெயர்	பதவி	பணிபுரிந்து வரும் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம்
1.	எ.கார்த்திகை வள்ளி	நகர சுகாதார செவிலியர்	இராமலிங்க நகர்
2.	ம.தனலெட்சுமி	நகர சுகாதார செவிலியர்	உறையூர்
3.	கு.அகிலா	நகர சுகாதார செவிலியர்	தென்னூர்
4.	டி.ஆரோக்கியராணி	நகர சுகாதார செவிலியர்	பீரங்கிகுளம்
5.	எஸ்.சங்கீதா	நகர சுகாதார செவிலியர்	ஸ்ரீரங்கம்
6.	பி.தமிழரசி	நகர சுகாதார செவிலியர்	தெப்பகுளம்
7.	வி.ஜி.உமாமகேஸ்வரி	நகர சுகாதார செவிலியர்	இருதயபுரம்
8.	பி.உமாராணி	நகர சுகாதார செவிலியர்	மேலகல்கண்டார் கோட்டை
9.	ப.இந்திரா (வயது முதிர்வின் காரணமாக ஓய்வு – 31.03.2026)	நகர சுகாதார செவிலியர்	பெரியமிளகு பாறை
10.	எஸ்.ரெமி	நகர சுகாதார செவிலியர்	இ.பி.ரோடு
11.	கே.எம்.சரஸ்வதி	நகர சுகாதார செவிலியர்	மேலகல்கண்டார் கோட்டை
12.	ரேவதி (வயது முதிர்வின் காரணமாக ஓய்வு – 28.02.2026)	நகர சுகாதார செவிலியர்	ஸ்ரீரங்கம்

மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள 12 நகர சுகாதார செவிலியர்களுக்கு அரசாணை எண்.306 நிதித்துறையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு சீருடைப்படி ரூ.1000/– இருந்து ரூ.2000/– ஆக உயர்த்தி வழங்கிட மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. அரசாணை எண். 306 நிதித்துறை நாள். 13.10.2017 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு நகர சுகாதார செவிலியர்களுக்கு சீருடைப்படி ரூ.1000/–இல் இருந்து ரூ.2000/– ஆக உயர்த்தி வழங்கிட அனுமதிக்கலாம்.
2. 2025–26ஆம் ஆண்டு முதல் நகர சுகாதார செவிலியர்களுக்கு சீருடைப்படி உயர்த்தி வழங்கிட அனுமதிக்கலாம்.

எச்7 (மையம்) / 2768 / 2026

தீர்மானம் எண்.583 பொருள்: 4 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள்: 5

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மண்டலம்–4. பிரிவு 1. வார்டு எண்.53க்குட்பட்ட பாரதிதாசன் சாலையில் உள்ள மாநகராட்சி மைய அலுவலக கட்டிடத்திற்கு ஆணையர் அறைக்கு நாற்காலி வாஷ்பேசின் முகம் பார்க்கும் கண்ணாடி பொருத்துதல் மற்றும் தரைதளத்தின் கழிப்பறையின் கூரை பூச்சு பெயர்ந்து உள்ளது மற்றும் கதவு பழுது ஏற்பட்டு உள்ளதாலும் அலுவலர்கள் மற்றும் பொதுமக்களின் பயன்பாட்டினை கருதி மராமத்து பணி செய்ய ஏதுவாக ரூ2.35 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி, பணி மேற்கொள்ள தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ், மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05% குறைந்த விலைப்புள்ளியில் உடன் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த M/S. GKV Construction Trichy ஒப்பந்தக்காரர் மூலம் பணி பணிமேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

இ4/5671/2026(மையம்)

தீர்மானம் எண்.584 பொருள்: 5 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

பொருள்: 6

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டுக்குழு அலுவலகம் எண்.04, வார்டு எண்.54க்குட்பட்ட மேரீஸ் அவென்யூ. குழலித் தோப்பு மற்றும் ப்ரண்ட்ஸ் என்கிளைவ் ஆகிய பகுதிகளில் மரகன்றுகள் நடுவு செய்து கம்பிவேலி அமைக்கும் பணியினை மேற்கொள்ள **ரூ.4.25** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, மேற்கண்ட பணியின் அவசர, அவசியம் கருதி, தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் – 1998, பிரிவு 57/7 இன் கீழ், மதிப்பீட்டின் விலையை விட **0.19** % சதவீதம் குறைவான விலை விகிதத்தில், விலைப்புள்ளி வழங்கிய **மெசர்ஸ்.ஸ்ரீ சாய் கன்ஸ்ட்ரக்சன்ஸ். திருச்சி,** நிறுவனம் மூலம் பணிகள் மேற்கொண்டதை மாமன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

இ2/10426/2025(மையம்)

தீர்மானம் எண்.585 பொருள்: 6 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

பொருள்: 7

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டுக்குழு அலுவலகம் எண்.04, வார்டு எண்.56க்குட்பட்ட கீரீன் அவென்யூ பூங்கா பகுதியில் அடர்வனக்காடுகள் (Miyawaki Forest) உருவாக்கும் பணியினை மேற்கொள்ள மதிப்பீடு **ரூ.3.25** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி, தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் – 1998, பிரிவு 57/7 இன் கீழ், மதிப்பீட்டின் விலையை விட **0.02** % சதவீதம் குறைவான விலை விகிதத்தில், விலைப்புள்ளி வழங்கிய, **மெசர்ஸ்.ஸ்ரீ சாய் கன்ஸ்ட்ரக்சன்ஸ் திருச்சி,** நிறுவனம் மூலம் பணிகள் மேற்கொண்டதை

அலுவலகக்குறிப்பு:

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

இ2/10707/2025(மையம்)

தீர்மானம் எண்.586 பொருள்: 7 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

பொருள்: 8

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி. மண்டலம் 3, வார்டு எண். 38க்குட்பட்ட GD நாயுடு தெரு சந்திப்பு காமாராஜ் நகர் கரை ரோடு பகுதியில் அமைந்துள்ள சிறுபாலத்தின் Deck Slab மேல்தளம் மற்றும் பக்க சுவர்கள் உடைந்து போக்குவரத்து தடை ஏற்படும் பாதுகாப்பற்ற நிலை உள்ளது. எனவே பழைய பாதுகாப்பற்ற சிறுபாலத்தினை அகற்றிவிட்டு புதிய சிறுபாலம் கட்டும் பணியினை மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.9.35 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ், மதிப்பீட்டைக்காட்டிலும் 0.06 % குறைந்த விலைப்புள்ளியில் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த M/s. AKRN கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், திருச்சி ஒப்பந்ததாரர் மூலம் அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு.

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

இ7/9466 / 2026 (மையம்)

தீர்மானம் எண்.587 பொருள்: 8 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

பொருள்: 9

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம்–5, வார்டு எண்.22 தில்லைநகர் முதல் குறுக்கு சாலையில் உள்ள துணை ஆணையர் குடியிருப்பு அமைந்துள்ளது. மேற்படி, குடியிருப்பினை ஆணையர் அவர்களால் பார்வையிட்டு மராமத்து பணியினை மேற்கொள்ள அறவுறுத்தியுள்ளார். அப்பணியினை விரைந்து முடித்து துணை ஆனணயர் அவர்களின் குடியிருப்பினை பயன்படுத்து வகையில் பணி மேற்கொள்ளவதற்காக அவசர அவசியம் கருதிக்கொண்டும் பணியானது மதிப்பீடு ரூ.7.90 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு, **தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ், மதிப்பீட்டைக் காட்டிலும் 0.02%,** குறைந்த விலைப்புள்ளியில் உடன் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த **திரு.G.வெங்கடேஷ்** ஒப்பந்தக்காரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(இ4/5710/2026 / மையம்)

தீர்மானம் எண்.588 பொருள்: 9 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

பொருள்: 10

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி. மண்டலம் 3, வார்டு எண்.38 மற்றும் 39க்குட்பட்ட சரத் நகர், ரஹமத் நகர் . SK மஹால் ,சோழன் நகர், பாப்பாக்குறிச்சி பிரதான சாலை ஆகிய பகுதிகளில் 75 மீட்டர் நீளத்திற்கு பாதாள சாக்கடை கழிவுநீர் பிரதான குழாய் உடைப்பு ஏற்பட்டுள்ள பகுதிகளை சரிசெய்யும் பணியினை மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.9.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ், மதிப்பீட்டைக்காட்டிலும் 0.30 % குறைந்த விலைப்புள்ளியில் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த M/s. AK கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், திருச்சி ஒப்பந்ததாரர் மூலம் அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு.

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

இ7/8456/2026 (மையம்)

தீர்மானம் எண்.589 பொருள்: 10 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

பொருள்: 11

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி. மண்டலம் 3, வார்டு எண். 39க்குட்பட்ட வின் நகர் மற்றும் பாலாஜி நகர் பிரதான சாலை (24 வது தெரு முதல் 27 வது தெரு வரை) ஆகிய பகுதிகளில் 90 மீட்டர் நீளத்திற்கு பாதாள சாக்கடை கழிவுநீர் பிரதான குழாய் உடைப்பு ஏற்பட்டுள்ள பகுதிகளை சரிசெய்யும் பணியினை மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.13.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ், மதிப்பீட்டைக்காட்டிலும் 0.28 % குறைந்த விலைப்புள்ளியில் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த M/s. AK கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், திருச்சி ஒப்பந்ததாரர் மூலம் அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு.

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

இ7/8455/2026 (மையம்)

தீர்மானம் எண்.590 பொருள்: 11 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

பொருள்: 12

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி – வார்டு குழு அலுவலகம் 5 – வார்டு எண் 26க்குட்பட்ட பிஷப் ஹிபர் கல்லூரி மற்றும் வார்டு எண்.55ல் உள்ள தேசிய கல்லூரிகளில் தேசிய தேர்வு முகமை மூலம் NEET (UG) 2026 தேர்வு 21.06.2026 அன்று நடத்தப்பட உள்ளதாகவும், இத்தேர்வு மையங்களுக்கு வெளியே தேர்வகளின் பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்கள் அமரும் வகையில் தற்காலிக பந்தல் மற்றும் குடிநீர் வசதிகளை தங்கு தடையின்றி வழங்க கோரி மாவட்ட ஆட்சித்தலைவர், திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதம் எண்.CULREV/ 31613/2025–E2. DT.19.06.2026 வழியாக மாநகராட்சி ஆணையருக்கு தெரிவித்ததன் அடிப்படையில் இப்பணியை அவசரம் அவசியத்தை கருதி பணியை மேற்கொள்ள மதிப்பீடு ரூ. 1.08 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார்செய்யப்பட்டு மதிப்பீட்டைக் காட்டிலும் (–)0.33% சதவிகிதம் குறைவான விலை விகிதத்தில் மேற்படி பணியினை செய்து தர சம்மதம் தெரிவித்த திரு. N.M.சுந்தர்ராஜன், **Trichy** ஒப்பந்தத்தாருக்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998, பிரிவு 57 (7) கீழ் தழிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998, பிரிவு 57 (7) ன் கீழ் பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : பார்வையிட்டு பதிவு செய்யலாம்

இ6/6346 /2026 (மையம்)

தீர்மானம் எண்.591 பொருள்: 12 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

பொருள்: 13

மாமன்ற தீர்மானம் எண். 351 நாள். 20.05.2026ன்படி ஸ்ரீரங்கம் பேருந்து நிலையத்தில் தூய்மை பணிகள் மேற்கொள்வதற்கு தேவையான மனித ஆற்றல்கள் 1 ஷீப்ட் பணிக்கு 2 தூய்மை பணியாளர்கள் வீதம் 3 ஷீப்ட் பணிக்கு தேவையான 6 தூய்மை பணியாளர்களை வெளிக்கொணர்வு முறையில் குறைந்த விலைப்புள்ளிகள் வழங்கிய M/s. DR Traders தஞ்சாவூர் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு ஜீன் 2026 (16.06.2026) நாளன்று முடிவடைந்தது.

இந்நிலையில் மேற்படி ஸ்ரீரங்கம் பேருந்து நிலையத்தினை தூய்மையாக பராமரித்திடவும் இப்பணியினை ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் மேற்கொள்ள காலதாமதம் ஆகும் என்பதால் அவசர அவசியம் கருதியும், மேற்படி M/s. DR Traders தஞ்சாவூர் நிறுவனம் வழங்கிய விருப்ப கடிதத்தின்பேரிலும், மேற்படி ஸ்ரீரங்கம் பேருந்து நிலையத்திற்கு தூய்மைப்பணிகள் மேற்கொள்ள தேவையான பணியாளர்களை ஒப்பந்தப்புள்ளி கோரி பெறப்படும் நாளது வரை ஏற்கனவே பெற்று வந்த தினக்கூலி அடிப்படையிலேயே தொடர்ந்து 150 நாட்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998, விதிகள் 2023 பிரிவு எண்.57(7)ல் மாநகராட்சி ஆணையருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ்" ரூ.7.10/- இலட்சம் தொகையில் M/s. DR Traders தஞ்சாவூர் நிறுவனத்திற்கு 17.06.2026 முதல் 13.11.2026 வரை தொடந்து மனித ஆற்றல்களை வழங்கிடவும் பணி நீடிப்பு செய்து M/s. DR Traders தஞ்சாவூர் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்க்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. பார்வையிட்டு பதிவு செய்யலாம்

எச்1/2754/2026

தீர்மானம் எண்.592 பொருள்: 13 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

பொருள்: 14

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம்-II , மற்றும் வார்டு எண் 30க்குட்பட்ட போர் நினைவு சின்னம் ஆகிய இரண்டு இடங்களில் சுதந்திர தின விழா கொண்டாடுவதற்கு வண்ணவிளக்கு மற்றும் அலங்காரம் செய்யும் பணி மதிப்பீட்டு தொகை ரூ. 1.80 இலட்சம் – மதிப்பீடு தயார் செய்யப்பட்டு இப்பணியின் அவசர அவசியம் கருதி **தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ், மதிப்பீட்டைக் காட்டிலும் 0.08%** குறைந்த விலைப்புள்ளியில் உடன் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த **திரு.R. ராமதாஸ் திருச்சி** ஒப்பந்தக்காரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

இ3 /8457/2026 (மையம்)

தீர்மானம் எண்.593 பொருள்: 14 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

பொருள்: 15

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம்-II , மற்றும் வார்டு எண் 18க்குட்பட்ட காந்தி மார்க்கெட் காந்தி சிலை மற்றும் தர்பார் மேடு பகுதியில் உள்ள காந்தி சிலைக்கு சுதந்திர தின விழாவிற்கு தேவையான அடிப்படை வசதிகள் வாடகை அடிப்படையில் மின் விளக்குகள் ஒலி மற்றும் ஒளி அமைப்பு சிகப்பு கம்பளம் மற்றும் காந்தி சிலையை சுற்றி வண்ணம் அடித்தல் போன்ற பணிகளுக்கு தொகை ரூ. 1.20 இலட்சத்திற்கு – மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, இப்பணியின் அவசர அவசியம் கருதி **தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ், மதிப்பீட்டைக் காட்டிலும் 0.10%** குறைந்த விலைப்புள்ளியில் உடன் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த **திரு.V.MUTHURAMAN திருச்சி** ஒப்பந்தக்காரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

இ3 /8677/2026 (மையம்)

தீர்மானம் எண்.594 பொருள்: 15 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

பொருள்: 16

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மண்டலம் 5, வார்டு எண் 24க்குட்பட்ட சி.எஸ்.ஐ மெத்தடிஸ் பெண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் அதன் அருகில் உள்ள சில பள்ளிகளில் 11 வது வகுப்பு பயிலும் மாணவ/மாணவிகளுக்கு 2025-2026ம் ஆண்டிற்கான விலையில்லா மிதிவண்டிகள் மாண்புமிகு நகராட்சி நிருவாக துறை மற்றம் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்களால் 14.11.2025ந் தேதியன்று வழங்கப்பட்டது மேற்படி விழாவிற்கு தேவையான இருக்கை வசதிகள், மற்றும் குளிர்சாதனபெட்டி, மிதிவண்டி வழங்குவதை அனைவரும் பார்க்கம் வகையில் தொலைகாட்டிச பெட்டி, சேர், தரைவிரிப்பான் ஒலியும் ஒலி தண்ணீர் வசதிகள் ஆகிய அடிப்படை பணிகளை மேற்கொள்ள ரூ.2.85 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மதிப்பீட்டு விலையை காட்டிலும் **0.27ரூ** குறைவான விலை வீதத்தில் செய்து தர சம்மதம் தெரிவித்த, **திரு.எம்.சுரேஷ்** திருச்சி ஒப்பந்ததாரர் மூலம் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998, பிரிவு 57(7) கீழ்பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : பார்வையிட்டு பதிவு செய்யலாம்

இ6/17422/2026 (மையம்)

தீர்மானம் எண்.595 பொருள்: 16 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

பொருள்: 17

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம்–!! வார்டு எண் 47க்குட்பட்ட ரேஸ் கோர்ஸ் சாலை பகுதியில் உள்ள SBM கழிவறைக்கு பாதாளசாக்கடை இணைப்பு வழங்கும் பணிக்கு மதிப்பீடு ரூபாய் 4.50/–இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு இப்பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998. பிரிவு 57(7)ன் கீழ் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.08% குறைந்த விலைப்புள்ளியில் உடன் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த M. சுரேஷ் திருச்சி ஒப்பந்தக்காரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

இ3/8460/2026 (மையம்)

தீர்மானம் எண்.596 பொருள்: 17 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

பொருள்: 18

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மண்டலம் 2 வார்டு எண் 47க்குட்பட்ட மைய சமையல் கூடம் பகுதியில் ஏற்கனவே அரசு பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகளுக்கு காலை உணவு வழங்கப்பட்ட வருகிறது. தற்போது 6 முதல் 8 வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு விரிவாக்கம் செய்யப்பட உள்ளது. இந்த சமையல் கூடத்தில் கூடுதலாக உணவு தயாரிப்பதற்கு தேவையான ஆழ்துளை கிணறு. CCTV Camera மற்றும் குடிநீர் வசதிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. எனவே மேற்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ 4.60 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு இப்பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.06% குறைந்த விலைப்புள்ளியில் உடன் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த சதீஸ்குமார். வி திருச்சி ஒப்பந்தக்காரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

இ3 /9794/2026 (மையம்)

தீர்மானம் எண்.597 பொருள்: 18 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

பொருள்: 19

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி. மண்டலம் 4, வார்டு எண். 62க்குட்பட்ட பஞ்சப்பூர் பகுதியில் புதிய கனரக சரக்கு முணையம் 09.05.2026 அன்று பொதுமக்கள் பயன்பாட்டிற்காக கொண்டு வரப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, கனரக சரக்கு முணையத்திற்கு சரக்கு வாகன இயக்குதல் மற்றும் பராமரித்தல் மேற்கொள்ளப்பட்டு முடிவடைந்த நிலையில், பராமரிப்பு பணிகள் தொடர்ந்து மேற்கொள்ள அவசியமாகிறது.

எனவே, கனரக சரக்கு வாகன முணையத்தின் பராமரிப்பு பணிகளை 01.07.2026 முதல் 30.09.2026 வரை மூன்று மாதங்களுக்கு மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.12.60 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ், மதிப்பீட்டைக்காட்டிலும் 0.06 % குறைந்த விலைப்புள்ளியில் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த M/s. DS டிரேடர்ஸ், திஞ்சாவூர் ஒப்பந்ததாரர் மூலம் அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு.

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

இ1 / 7091 / 2026 (மையம்)

தீர்மானம் எண்.598 பொருள்: 19 M/s DS டிரேடர்ஸ் திஞ்சாவூர் என்பதை M/s DR டிரேடர்ஸ் தஞ்சாவூர் என்ற திருத்தத்துடன் பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

பொருள்: 20

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி – வார்டு குழு அலுவலகம் 1 – வார்டு எண் 5க்குட்பட்ட TRUNK ரோடு பகுதியில் ராகவேந்திரா கார்டன், சாரதி நகர் ,அருள் முருகன் கார்டன் , சமுதாயம் மற்றும் VS நகர் ஆகிய பகுதிகளிலிருந்து TRUNK ரோட்டில் அமைந்துள்ள கழிவுநீர் உந்து நிலையத்திற்கு அனைத்து பகுதிகளின் கழிவு நீர்களும் வந்து சேருகின்றன . இதிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் சேகரிப்பு தொட்டி மற்றம் பாதாள சாக்கடை தொட்டி சேதமடைந்துள்ளது. இதனால் பாதாள சாக்கடை கழிவு நீர் தெருக்களில் வெளியேறுவதால் மக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே இதை சீர் செய்யும் பொருட்டு மேற்படிதொட்டியின் Roof மற்றும் பாதாள சாக்கடை தொட்டி மறுகட்டமைப்பு பணி மேற்கொள்ள மதிப்பீடு ரூ. 2.25 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார்செய்யப்பட்டு மதிப்பீட்டைக் காட்டிலும் (–)0.02 சதவிகிதம் குறைவான விலை விகிதத்தில் மேற்படி பணியினை செய்து தர சம்மதம் தெரிவித்த **M/s. A.A.Infra Trichy** ஒப்பந்தத்தாருக்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998, பிரிவு 57 (7) ன் கீழ் பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : பார்வையிட்டு பதிவு செய்யலாம்

இ6/6967/2026 (மையம்)

தீர்மானம் எண்.599 பொருள்: 20 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

பொருள்: 21

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம்–4, வார்டு எண்.56க்குட்பட்ட கருமண்டபம் பகுதியில் உள்ள எல்.பி.ஜி எரிவாயு தகன மேடைகளை பராமரிப்பு மற்றும் பழுது பார்க்கும் பணி ரூ.3.75 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, **மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ், மதிப்பீட்டைக் காட்டிலும் 0.63%**, குறைந்த விலைப்புள்ளியில் உடன் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த திரு.எம்.பாபுராஜ், திருச்சி ஒப்பந்தக்காரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:– பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(இ4/ 4178/2026 / மையம்)

தீர்மானம் எண்.600 பொருள்: 21 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

பொருள்: 22

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம்–3, வார்டு எண்.40,41 மற்றும் 42க்குட்பட்ட பகுதிகளில் விடுபட்ட பகுதிகளில் குடிநீர் பகிர்மான குழாய் அமைத்திட பொதுமக்கள் நலன் கருதியும், (TURIP 25–26ன் கீழ் தமிழ்நாடு நகர்புற சாலை உள்கட்டமைப்பு திட்டம்) மேற்படி திட்டத்தின் சாலைகள் அமைக்கும் முன் விடுபட்ட பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய் அமைத்திடவும், குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதியும் மதிப்பீடு ரூ.6.95 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு, **தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ், மதிப்பீட்டைக் காட்டிலும் 0.08%**, குறைந்த விலைப்புள்ளியில் உடன் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த **திரு.R.விஸ்வநாதன்** ஒப்பந்தக்காரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(இ4/ 4028 /2025 / மையம்)

தீர்மானம் எண்.601 பொருள்: 22 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

பொருள்: 23

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டுக் குழு அலுவலகம்–II வார்டு எண் 30க்குட்பட்ட மண்டலம் 2 அலுவலகத்தில் தேர்தல் SIR பணிக்குத் தேவையான Projector, Speaker, Plug Point மற்றும் MIC ஆகியனவற்றை மேற்கொள்ளும் பணிக்கு மதிப்பீடு ரூ.3.12/– இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு, இப்பணியின் அவசர அவசியம் கருதி **தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 57(7)ன் கீழ், மதிப்பீட்டைக் காட்டிலும் 0.03%** குறைந்த விலைப்புள்ளியில் உடன் பணி செய்து தர சம்மதம் தெரிவித்த மெசர்ஸ். GNS கன்ஸ்ட்ரக்சன், திருச்சி ஒப்பந்தக்காரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

14916 /2025 /இ3 (மையம்)

தீர்மானம் எண்.602 பொருள்: 23 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

பொருள்: 24

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் அம்ரூத் திட்டத்தின் கீழ், விடுப்பட்ட பகுதிகள் மற்றும் புதிதாக சேர்க்கப்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்துவதற்கு ரூ.377.29 கோடி மதிப்பீட்டில் 3 தொகுப்புகளாக பிரிக்கப்பட்டு, தொகுப்பு எண். 2 மற்றும் 3 அனைத்து பணிகளும் முடிவுற்று சோதனை ஓட்டம் நடைபெற்று கொண்டிருக்கிறது. தொகுப்பு எண்.1ல் அணைத்து பணிகளும் முடிவடைந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் நிலையில் உள்ளது.

இத்திட்டத்தில் அடங்கும் தொகுப்பு எண்.3ல், வார்டு எண்.46க்குட்பட்ட 37 MLD கொள்ளளவுள்ள கீழகல்கண்டார் கோட்டை பகுதியில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (SBR Technolgoy) அமைக்கும் பணிக்கு வழிவகை செய்யப்பட்டு, மெசர்ஸ். ஈகோ புரடக்ஷன்ஸ் இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் சென்னை நிறுவனத்திற்கு ரூ.53.30 கோடிக்கு 30.01.2019 அன்று 10 ஆண்டுகள் இயக்கி மற்றும் பராமரிக்கும் பணிக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு, தற்பொழுது மேற்கூறிய நிறுவனத்தின் பராமரிப்பில் உள்ளது.

தேசிய பசுமை தீர்ப்பாயம் மற்றும் மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் (NGT & CPCB) வழிகாட்டுதல்களின் படி, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில், வெளியேற்றப்படும் கழிவுநீரினை ஆன்லைன் வழி தொடர்ச்சியான கழிவுநீர் கண்காணிப்பு அமைப்பு (Online Continuous Effulent Monitoring System (OCEMS)) நிறுவுவதற்கு குறிப்பு தெரிவிக்கப்பட்டுள்ளதன் பேரிலும், நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்கள் 08.09.2026 அன்று நடைபெற்ற மாதாந்திர ஆய்வுக்கூட்டத்தில், அனைத்து சுத்திகரிப்பு நிலையங்களிலும் OCEMS நிறுவப்பட வேண்டும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், வார்டு எண்.36க்குட்பட்ட 37 MLD கொள்ளளவுள்ள கீழகல்கண்டார் கோட்டை பகுதியில் ஆன்லைன் வழி தொடர்ச்சியான கழிவுநீர் கண்காணிப்பு அமைப்பு (Online Continuous Effulent Monitoring System (OCEMS)) அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.62.93 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி கோரி மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மதிப்பீட்டு தொகை ரூ. 62.93 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. 2026-27ஆம் வரவு செலவு திட்டதில் கழிவுநீர் அகற்றல் பணிகள் பராமரிப்பு செலவினங்கள் என்ற தலைப்பின் கீழ் (2305010) ஒதுக்கப்பட்டுள்ள நிதி ரூ.700.00 இலட்சத்திலிருந்து இப்பணியை ஒதுக்கீடு செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்.

இ6/10498 /2026(மையம்)

தீர்மானம் எண்.603 பொருள்: 24 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது

பொருள்: 25

அரசாணை (நிலை) எண்.123, நிதி (மருத்துவக் காப்பீடு)த் துறை, நாள் 24.06.2026 இன் படி புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், 2026 (New Health Insurance Scheme, 2026) மாநில அரசு ஓய்வூதியர்கள் (அவர்களது வாழ்க்கைத் துணை உட்பட) மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்காக 01.07.2026 முதல் 30.06.2031 வரை ஐந்து ஆண்டுகள் கொண்ட தொகுப்புக் காலத்திற்கு United India Insurance Company Limited, Chennai மூலம் நடைமுறைப்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது.

மேற்படி அரசாணையின்படி, ஓய்வூதியர் / குடும்ப ஓய்வூதியர் ஒருவருக்கான ஆண்டு காப்பீட்டுக் கட்டணம் ரூ.7,728/- ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதற்காக மாதந்தோறும் ரூ.644/- வீதம் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியத்திலிருந்து சந்தாவாகப் பிடித்தம் செய்யப்பட வேண்டும். மாதாந்திர சந்தாவை விட கூடுதலாக செலுத்த வேண்டிய காப்பீட்டுக் கட்டணம் ஏதேனும் இருப்பின், உள்ளாட்சி அமைப்பைச் சேர்ந்த ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்களைப் பொறுத்தவரை அந்தக் கூடுதல் நிதிச்சுமையை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பே ஏற்க வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ், அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சைகள் / அறுவைச் சிகிச்சைகளுக்கு குடும்ப அடிப்படையிலான பணமில்லா சிகிச்சை முறையில் ஐந்து ஆண்டுத் தொகுப்புக் காலத்திற்கு சாதாரணமாக ரூ.7.50 இலட்சம் வரையிலும், அரசாணையின் Annexure-I-A-ல் குறிப்பிடப்பட்டுள்ள குறிப்பிட்ட நோய்களுக்கு ரூ.12.00 இலட்சம் வரையிலும் மருத்துவ காப்பீடு வழங்கப்படுகிறது. உள்ளாட்சி அமைப்புகள் இத்திட்டத்தைத் தேர்வு செய்து ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில், சம்பந்தப்பட்ட ஓய்வூதியம் வழங்கும் அதிகாரி United India Insurance Company Limited நிறுவனத்துடன் நேரடியாக ஒப்பந்தம் மேற்கொள்ள வேண்டும் என்றும், அவ்வொப்பந்தம் மேற்கொள்ளப்படும் நாளிலிருந்து மருத்துவக் காப்பீட்டுப் பாதுகாப்பு அமலுக்கு வரும் என்றும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களின் நலனை முன்னிட்டு, புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், 2026-ஐ மாநகராட்சியில் ஏற்றுக்கொண்டு, காப்பீட்டு நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும் நாளிலிருந்து திட்டத்தை நடைமுறைப்படுத்துவது உகந்ததாகக் கருதப்படுகிறது. அக்டோபர் 2026 மாத ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியத்திலிருந்து, திட்டத்திற்குத் தகுதியான ஒவ்வொரு ஓய்வூதியர் / குடும்ப ஓய்வூதியரிடமிருந்தும் மாதம் ரூ.644/- வீதம் பிடித்தம் செய்து, உரிய கணக்குத் தலைப்பில் செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளலாம். திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் உத்தேசமாக 01.10.2026 அன்றைய தேதியில், அரசாணையின் தகுதிகளின் அடிப்படையில் தகுதிவாய்ந்த ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு, மாதம் ரூ.644/- வீதம் ஒருவருக்கான ஆண்டு காப்பீட்டுக் கட்டணம் ரூ.7,728/- வீதம் ஓராண்டுக் காப்பீட்டுக் கட்டணம் GST யுடன் சேர்த்து செலுத்தப்பட வேண்டும்.

அரசாணை மற்றும் காப்பீட்டு ஒப்பந்த நிபந்தனைகளின்படி, ஓராண்டுக்கான காப்பீட்டுக் கட்டணம் காப்பீட்டு நிறுவனத்திற்குத் தொடக்கத்திலேயே முன்பணமாகச் செலுத்தப்பட வேண்டும். முதல் ஆண்டிற்கு, அரசாணை வழிகாட்டுதலின் பத்தி 17(1)-ன்படி உத்தேச ஆண்டு Premium-ல் 95 விழுக்காடு ad hoc முன்பணமாகச் செலுத்தப்பட்டு, மீதமுள்ள தொகை / சரிக்கட்டுதல் புதுப்பிக்கப்பட்ட பயனாளிகள் விவரத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும். அதன்படி 01.10.2026 அன்று தகுதியான ஓய்வூதியர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் 95 விழுக்காடு முன்பணம் மற்றும் மீதமுள்ள 5 விழுக்காடு இறுதிக் கணக்கீட்டின்படி செலுத்தப்பட வேண்டும்.

ஒரே நபர் தனது சொந்த ஓய்வூதியத்துடன் குடும்ப ஓய்வூதியமும் பெற்று வந்தாலோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட குடும்ப ஓய்வூதியம் பெற்று வந்தாலோ, அரசாணை வழிகாட்டுதலின் பத்தி 6(2)(e), 6(2)(f) மற்றும் 6(3)-ன்படி, அவர் அளிக்கும் விருப்பத்தின் அடிப்படையில் ஏதேனும் ஒரு ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியத்திலிருந்து மட்டும் மாதாந்திர NHIS சந்தா ரூ.644/- பிடித்தம் செய்யப்பட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட ஓய்வூதியங்களில் சந்தா இருமுறை பிடித்தம் செய்யப்படக்கூடாது. ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களிடமிருந்து மாதந்தோறும் பிடித்தம் செய்யப்படும் சந்தாத் தொகைக்கு மேலாகச் செலுத்த வேண்டிய காப்பீட்டுக் கட்டணம், GST மற்றும் இதர சட்டப்பூர்வக் கட்டணங்கள் உள்ளிட்ட கூடுதல் நிதிச்சுமை ஏதேனும் ஏற்படும் பட்சத்தில், அத்தொகை காப்பீட்டு நிறுவனத்தின் இறுதி ஒப்பந்த நிபந்தனைகள் மற்றும் இறுதிக் கணக்கீட்டிற்குட்பட்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி நிதியிலிருந்து ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

எனவே, கீழ்க்கண்ட இனங்களுக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(1). அரசாணை (நிலை) எண்.123, நிதி (மருத்துவக் காப்பீடு)த் துறை, நாள் 24.06.2026-ஐ திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு உரிய மாற்றங்களுடன் ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்துதல்;

(2). United India Insurance Company Limited நிறுவனத்துடன் தேவையான ஒப்பந்தம் மேற்கொள்ள அனுமதித்தல்;

(3). ஒப்பந்தம் அமலுக்கு வரும் நாளிலிருந்து தகுதியான ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்களின் மாதாந்திர ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியத்தில் ரூ.644/- வீதம் பிடித்தம் செய்தல்;

(4). பிடித்தம் செய்யப்படும் சந்தாத் தொகையை உரிய கணக்குத் தலைப்பில் வரவு வைத்து, காப்பீட்டு நிறுவனத்திற்குச் செலுத்துதல் மற்றும் தேவையான மாதாந்திர / ஆண்டறிக்கைகளை அனுப்புதல்;

(5). ஒப்பந்த நிபந்தனைகளின்படி ஓராண்டுக்கான காப்பீட்டு கட்டணத்தை முன்பணமாகச் செலுத்துதல்; முதல் ஆண்டிற்கு உத்தேச ஆண்டு Premium-ன் 95 விழுக்காட்டினை ad hoc முன்பணமாகச் செலுத்தி, மீதமுள்ள தொகையை இறுதிக் கணக்கீட்டின்படி சரிக்கட்டுதல்;

(6). GST 18 விழுக்காடு கூடுதலாகப் பொருந்தும் பட்சத்தில், முதல் ஆண்டிற்கான 95 விழுக்காடு முன்பணத்தில் GST உட்பட முன்பணத் தொகை 01.10.2026 ந் தேதிய நிலவரப்படி தகுதியானவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் தகுந்த தொகையினை மாநகராட்சி நிதியிலிருந்து செலுத்துதல்;

(7). ஒரே நபர் சொந்த ஓய்வூதியத்துடன் குடும்ப ஓய்வூதியம் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட குடும்ப ஓய்வூதியம் பெறும் நிகழ்வுகளில், அவர் அளிக்கும் விருப்பத்தின் அடிப்படையில் ஒரு ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியத்திலிருந்து மட்டும் மாதம் ரூ.644/- சந்தா பிடித்தம் செய்து, இரட்டைப் பிடித்தம் ஏற்படாமல் உறுதி செய்தல்;

(8). மாதாந்திர சந்தாவுக்கு மேலாக செலுத்த வேண்டிய கூடுதல் காப்பீட்டுக் கட்டணம் இருப்பின், அதனை மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து ஏற்றுக்கொள்ளுதல்;

(9). திட்டத்தைச் செயல்படுத்தத் தேவையான தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

அலுவலகக் குறிப்பு:

மேற்கண்ட (1) முதல் (9) வரையிலான இனங்களுக்கு மாமன்றத்தின் அனுமதி வழங்கலாம்.

பி4/10355/2026 (மையம்)

தீர்மானம் எண்.604 பொருள்: 25 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது

பொருள்: 26

இம்மாநகராட்சியின் ஐந்து வார்டு குழுவிற்குட்பட்ட 65 வார்டுகளில் ஏ டி எஸ் கொசுக்களால் ஏற்படும் டெங்கு காய்ச்சல் கட்டுப்படுத்தவும் ஏ டி எஸ் கொசுக்கள் பெருகாத வகையில் டெங்கு கொசு புழுக்கள் வளர்வதற்கு ஏதுவாக உள்ள ஆதாரங்களை கண்டறிந்து அழிக்கும் பணிகளை மேற்கொள்ள மாமன்ற தீர்மானம் எண். 194 நாள்.03,03,2026ன் படி M/s A N S Traders திருச்சி நிறுவனத்தின் மூலம் வெளிக்கொணர்வு முறையில் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் ஒவ்வொரு வார்டுகுழு அலுவலகத்திற்குட்பட்ட பகுதிகளில் 60 மனித ஆற்றல்கள் பெற்று 120 நாட்களுக்கு டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ளப்பட்டும் இப்பணியின் அவசர அவசியம் கருதி மேலும் மாமன்ற தீர்மானம் எண்.446 நாள் 16,07,2026ன் படி 120 நாட்களுக்கும் பணிநீடிப்பு செய்து பணி நடைபெற்று வரும் நிலையில் இப்பணிக்கான காலம் எதிர்வரும் 16.11.2026 தேதியுடன் முடிவு பெறுகிறது.

மாவட்ட சுகாதார அலுவலர், திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதம் ந.க.எண்:61/அ7.2025, நாள் 17.09.2025 பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை வழிகாட்டுதலின்படி இம்மாநகராட்சியில் 300 வீடுகளுக்கு ஒரு டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணியாளர் வீதம் பணியமர்த்தி டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கை தீவிரமாக மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

7	வார்டு எண்.24,27,28க்குட்பட்ட பகுதிகளில் உள்ள வாய்க்கால்கள் மற்றும் மழைநீர் வடிகால்களை மனித ஆற்றல் மற்றும் இயந்திரம் கொண்டு தூர்வாரும் பணியினை மேற்கொள்ளுதல் மதிப்பீடு ரூ.11.95 இலட்சம் **இ6/ 9700-6 /2026 மையம்**	1.மெசர்ஸ்.பிரனவ் டிரேடர்ஸ், திருச்சி 16.00% குறைவு (தொழில் நுட்ப தகுதி பெற்றுள்ளவை) 2.M/s.RC கண்ஸ்ட்ரக்ஸன்ஸ், திருச்சி (தொழில்நுட்ப தகுதி பெறவில்லை) 3.M/s.MRS காண்ட்ராக்டர், திருச்சி (தொழில்நுட்ப தகுதி பெறவில்லை)	தொழில்நுட்ப தகுதிபெற்றுள்ள ஒரு ஒப்பந்தப் புள்ளிகளில், , மெசர்ஸ். பிரனவ் டிரேடர்ஸ், திருச்சி நிறுவனம், மதிப்பீட்டைக் காட்டிலும் 16.00% குறைவான விலை விகிதத்தில் இப்பணியினை செய்து தருவதாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதாலும், இப்பணி உடனடியாக மேற்கொள்ள வேண்டிய பணியாக இருப்பதால், கூடுதல் முன்வைப்புத் தொகையாக ரூ.1,42,450-ஐ (குறைவான விலை விகிதத்தில் 5 சதவீதத்திற்கு கூடுதலாக உள்ளதால், கூடுதல் வித்தியாசத் தொகை) வங்கி வரைவோலையாக இம்மாநகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிந்துரைத் துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்..

அலுவலகக் குறிப்பு:

1. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள வரிசை எண்.1 முதல் 7 வரை கண்டுள்ள பணிகளுக்கு ஆணையர் அவர்களின் அனுமதி நாள்.28.08.2026ல் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண்.4ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்தரவு வழங்கவும் மாமன்றம் அனுமதி அளிக்கலாம்

இ7/9700/2026(மையம்)

தீர்மானம் எண்.620 பொருள்: 41 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

மேயர்
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

நிகழ்ச்சி நிரல்

துணை அறிவிப்பு

பொருள்:1

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டுக்குழு அலுவலகம்–4க்கு உட்பட்ட பஞ்சப்பூர் பகுதியில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி பேருந்து முனையம் 16.07.2025ஆம் தேதி முதல் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டதனைத் தொடர்ந்து மத்திய பேருந்து நிலையத்தில் இயங்கி வந்த அனைத்து பேருந்துகளும் மேற்படி முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி பேருந்து முனையத்திற்கு மாற்றம் செய்யப்பட்டதால் மத்தியப் பேருந்து நிலையத்தில் நகரப் பேருந்துகள் குறைவான எண்ணிக்கையில் வந்து செல்வதால் பயணிகளின் எண்ணிக்கை குறைந்து விட்டதால் ஏற்கனவே 6 குத்தகை இனங்களில் இருசக்கர வாகன நிறுத்தத்திற்கான குத்தகை இனம் தவிர இதர 5 குத்தகை இனங்களை குத்தகை இனத்தில் இருந்து நீக்கம் செய்தது மேலும், குறைவான எண்ணிக்கையில் மத்திய பேருந்து நிலையத்திற்குள் நகரப் பேருந்துகள் வந்து செல்வதால் மத்திய பேருந்து நிலையத்திற்குள் கிழக்கு பகுதியில் உள்ள கழிப்பிடத்தை புதிய இனமாக கருதி ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மாமன்ற தீர்மானம் எண்.564, நாள்:29.08.2025இல் நிறைவேற்றப்பட்டது.

கடந்த 29.10.2025ஆம் தேதிய ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிக்கையின் வாயிலாக ஏ.எஸ்.ஜி மத்திய பேருந்து நிலையத்தில் கிழக்கு பகுதி கட்டண கழிப்பிடம் மற்றும் இருசக்கர வாகன நிறுத்தும் இடத்திற்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமதாரர்கள் நியமனம் செய்ய ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு குத்தகைதாரர்களுக்கு உரிமம் வழங்கப்பட்டது.

வ. எண்.	இனம்	ஒப்பந்ததாரர்கள் விபரம், (திருவாளர்கள்)	ஒப்பந்தப்புள்ளி தொகை விபரம்
1.	"ஏ.எஸ்.ஜி லூர்து சாமி பிள்ளை மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள கிழக்கு பகுதி கழிப்பிடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்	D.கணேசன், த/பெ.துரைசாமி, 2, கிழக்கு தெரு, மலைக்கோட்டை, திருச்சி–02	மாதம் ஒன்றுக்கு ரூ.1,29,999/–
2.	"ஏ.எஸ்.ஜி லூர்து சாமி பிள்ளை மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள இருசக்கர வாகனம் நிறத்தும் இடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்	V.சீனிவாசன், த/பெ.வெங்கடாஜலம், 34/B, வடக்கு கல்லுக்கார தெரு, எடத்தெரு, பாலக்கரை, திருச்சி–01.	மாதம் ஒன்றுக்கு ரூ.1,45,555/–

இதனைத் தொடர்ந்து திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண்.901, நாள்:28.11.2025ன்படி இவ்வலுவலக செயல்முறை வாயிலாக 01.12.2025 முதல் 31.03.2026 வரை (நான்கு மாத காலம்) உள்ள உரிமகாலத்திற்கு உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு உரிமம் வழங்கி பிறப்பிக்கப்பட்ட செயல்முறையில் இரண்டாம் ஆண்டு 2026–2027 குத்தகை தொகையில் 50 விழுக்காடு தொகைக்கும் (ரூ.9,62,847/–) மூன்றாம் ஆண்டு 2027–2028 குத்தகை தொகையில் 25 விழுக்காடு தொகைக்கும் (ரூ.5,05,495/–)ஆக கூடுதல் ரூ.14,68,342/–க்கு வங்கி (BANK GURANTEE BOND) உறுதிப்பத்திரம் பெற்று ஒப்படைப்பதின் பேரிலும், சம்மந்தப்பட்ட உதவி ஆணையர் மற்றும் உதவி நிர்வாக பொறியாளரிடம் உரிய சான்றொப்பம் பெற்று உடன் சமர்ப்பிக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து ஆணையரது ஒப்புதல் ஏதும் பெறப்படாமல் இவ்வலுவலக 02.12.2025ம் தேதியிட்ட வார்டு குழு அலுவலகம்–4, உதவி ஆணையர், திருத்திய செயல்முறையில் குத்தகை காலம் 01.12.2025 முதல் 31.03.2026 முடிய மட்டும் பொருந்தும் என குறிப்பிட்டு திருத்திய செயல்முறை குத்தகைதாரர் திரு.D.கணேசன் மற்றும் திரு.V.சீனிவாசன் ஆகியோருக்கு சார்பு செய்யப்பட்டது.

இந்நிலையில் செயல்முறைகளின் 31.03.2026 முதல் குத்தகை உரிமம் முடிவடைய உள்ளதாலும், 15.03.2026 முதல் தேர்தல் நடத்தை விதிகள் அமுலுக்கு வந்ததாலும், பழைய மத்திய பேருந்து நிலையத்தில் பயணிகள் வந்து செல்வதாலும், கட்டண கழிப்பிடம் மற்றும் இருசக்கர வாகன நிறுத்தம் தொடர்ந்து செயல்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால் ஆணையர் அவர்களின் 24.03.2026ஆம் நாளைய ஒப்புதலின்படி ஏ.எஸ்.ஜி லூர்து சாமி பிள்ளை மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள கிழக்கு பகுதி கழிப்பிடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் திரு.D.கணேசன், என்பவருக்கும் மற்றும் ஏ.எஸ்.ஜி லூர்து சாமி பிள்ளை மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள இருசக்கர வாகனம் நிறத்தும் இடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் திரு.V.சீனிவாசன், என்பவருக்கும் 01.04.2026 முதல் 31.07.2026 வரை அதே குத்தகை தொகையில் நீட்டிப்பு செய்து இவ்வலுவலக 30.03.2026ந் தேதியிட்ட செயல்முறை வாயிலாக உத்தரவிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து மாமன்றத் தீர்மானம் பெறப்பட்டது.

இந்நிலையில் மேற்கண்ட குத்தகை இனங்கள் 31.07.2026இல் முடிவடைவதால் ஆணையர் அவர்களின் 31.07.2026ந் தேதிய ஒப்புதலின்படி ஏ.எஸ்.ஜி லூர்து சாமி பிள்ளை மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள கிழக்கு பகுதி கழிப்பிடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் திரு. D.கணேசன் என்பவருக்கு அதே குத்தகை தொகையில் 01.08.2026 முதல் 30,09,2026 முடியவும், ஏ.எஸ்.ஜி லூர்து சாமி பிள்ளை மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள இருசக்கர வாகனம் நிறத்தும் இடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் திரு. V.சீனிவாசன், என்பவருக்கு 01.08.2026 முதல் 30.09.2026 முடிய நீட்டிப்பு செய்யப்பட்டு பின் மாமன்ற ஒப்புதல் பெறப்பட்டது.

மேலும், மேற்கண்ட குத்தகை இனங்கள் 30.09.2026 அன்று முடிவடைவதால் 01.10.2026 முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை விடுவதற்கு கண்டுள்ள பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பின் வாயிலாக 21.08.2026 அன்று பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பொது ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை, மாறாக ஒப்பந்தப்புள்ளியில் மட்டும் மேற்கண்ட இரண்டு குத்தகை இனத்திற்கும் திரு.ஜெய்லா என்பவர் மட்டும் கலந்து கொண்டு தலா ஒரு ஒப்பந்தப்புள்ளி(Tender) பெறப்பட்டது.

இந்நிலையில் திரு.V.சீனிவாசன், என்பவரால் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண்.W.P.(M.D)NO.24236 of 2026 and W.M.P(M.D)Nos.18046 of 2026இல் கீழ்க்கண்டுள்ளவாறு இடைக்கால தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

"3.Considering the same, the respondents are directed not to declare the results of the auction to be held on 21.08.2026 pending further orders of theis Court."

"4. Notice to the respondents returnable by 18.09.2026. Private notice is also permitted."

திரு.D.கணேசன், என்பவரால் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண்.W.P.(M.D)NO.24236 of 2026 and W.M.P(M.D)Nos.18046 of 2026இல் கீழ்க்கண்டுள்ளவாறு இடைக்கால தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

"3.Considering the same, the respondents are directed not to declare the results of the auction to be held on 21.08.2026 pending further orders of theis Court."

"4. Notice to the respondents returnable by 18.09.2026. Private notice is also permitted."

மேற்கண்ட வழக்குகளின் படி 21.08.2026ஆம் தேதி அன்று நடைப்பெற்ற பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி முடிவுகளை அறிவிக்க வேண்டாம் என்று மேற்கண்ட இடைக்கால தடை உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளதால் அன்றைய தினம் வார்டு குழு அலுவலகம் 4ல் நடைபெற்ற பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளியினை அறிவிப்பு இரத்து செய்யப்பட்டது.

(அ.)இந்நிலையில் இவ்வலுவலக 02.12.2025ம் தேதிய செயல்முறை உத்தரவானது ஆணையர் மற்றும் மாமன்ற ஒப்புதல் பெறாமல் வழங்கப்பட்டதனை கருத்தில் கொண்டு அதனை செயலற்றதாக (Null&Void) கருதி இம்மாநகராட்சி மூன்றாண்டு கால குத்தகை உரிம இனங்களுக்கான பொதுக்கட்டுப்பாட்டு விதிகளின் படி இவ்வலுவலக 01.12.2025ம் தேதிய செயல்முறை உத்தரவினை தொடர்ந்து நடைமுறைப்படுத்திட மாமன்றத்தின் அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1), 21.08.2026ஆம் தேதியன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி இரத்து செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம்.

2) 02.12.2025ம் தேதிய செயல்முறை உத்தரவினை இரத்து செய்து 01.12.2025ம் தேதிய செயல்முறை உத்தரவினை தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வெளியிட்ட உத்தரவினை மாமன்றம் அனுமதிக்கலாம்.

அ1/306/2025(வா.கு.அ–4)

தீர்மானம் எண்.621 பொருள்: 1 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள்:2

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் – 1க்குட்பட்ட மலைகோட்டை வாகன நிறுத்த கட்டணம் வசூல் செய்யும் இனத்திற்கு 17.07.2026ஆம் தேதியன்று ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. ஏலத்தில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்களின் விபரம் பின்வருமாறு,

வ எ ண்	குத்தகை இனம் விபரம்	வ. எ ண்	பெயர் மற்றும் முகவரி	ஏல கேள்வித் தொகை	ஒப்பந்தப் புள்ளி தொகை	குறிப்பு
1	2	3	4	5	6	7
1	மலைக்கோட்டை வாகன நிறுத்த கட்டணம் வசூல் செய்யும் இனம்	1	D.கணேசன் 2 கீழ வீதி மலைகோட்டை திருச்சி	–	1022730	இவ்வினத்திற்கு 17.07.2026 அன்று முதல் முறையாக ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. ஐந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரபெற்றது. இதில் வரிசை எண்.01ல் கண்ட திரு.D.கணேசன் என்பவரின் ஒப்பந்தபுள்ளி தொகை ரூ.1022730/–ஆகும். மேற்படி வாகன நிறுத்தும் இடத்தில் 50 வாகனங்கள் நிறுத்திகொள்ளலாம். இதில் ஒரு வாகனத்திற்கு 06 மணி நேரத்திற்கு ரு.50/–வீதம் 50 வாகனங்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.2500/– வசூல் செய்யப்படும். ஒரு வருடத்திற்கு ரூ.912500 வசூல் செய்யப்படும். அனால், தற்போது துறை மூலம் 01.04.2026 முதல் 30.07.2026 வரை 121 நாட்களுக்கு ரூ.78,870/– வசூல் செய்யப்பட்டுள்ளது. நாள் ஒன்றுக்கு சராசரியாக ரூ.652/– மட்டுமே வசூல் செய்யப்பட்டு வருகிறது. இதில் பணியாளர் ஊதியம் மற்றும் ரசீது புத்தகங்கள் அச்சடிக்கும் செலவுகள் துறை மூலம் வசூல் செய்யப்படும் தொகையை விட அதிகமாக செலவு செய்யப்படுகிறது. எனவே மேற்படி காரணங்களை கருத்தில் கொண்டு மாநகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படாமல் இருக்க வரிசை எண்.01ல் கண்ட திரு.D.கணேசன் என்பவரின் ஒப்பந்தபுள்ளி தொகை ரூ.1022730/–ஐ ஏற்பது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.
		2	ஜெயந்தி 34/B வடக்கு கல்லுக்கார தெரு எடத் தெரு பாலக்கரை	–	912500	
		3	அருணம்பாள் 4 மேல தேவதானம் திருச்சி	–	691000	
		4	S.சரவண செல்வன் 17, கீழ வீதி மலைகோட்டை	–	545000	
		5	K.பழனிமுத்து 6/64, வெனிஷ் தெரு, சிந்தாமணி	–	கேள்வி இல்லை	

அலுவலக குறிப்பு:

மேற்கண்ட பட்டியலில் காணும் மலைகோட்டை வாகன நிறுத்த கட்டணம் வசூல் செய்யும் இனத்திற்கு கலம் 7ல் குறிப்பிட்ட காரணங்களின் அடிப்படையில் வரபெற்ற ஒப்பந்தப்புள்ளி தொகையினை மாமன்ற அனுமதி பெற்று மேற்படி இனத்தை குத்தகைதாரருக்கு ஒப்படைப்பு செய்வதற்கும் அனுமதி அளிக்கலாம்.

அ1/ 367 /2026/(வா.கு–1)

தீர்மானம் எண்.622 பொருள்: 2 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள்:3

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் தினசரி அலுவலக கள ஆய்வு மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பயன்படுத்தப்படும் இலகுரக வாகனங்களுக்கு தேவையான டயர்கள் மற்றும் டியூப்கள் – 50 எண்ணிக்கை, வழங்கும் பணிக்கு ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி எண்.49, நாள்:07.07.2026ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டது. அதனடிப்படையில் முதன் முறையாக ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்,22/2026–27ன் வாயிலாக 17.08.2026ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் தகுதி பெற்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி விபரம் பின்வருமாறு பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

Name of work	Qty In Nos	Estimate		M/s. Rising Tyres, Trichy	
		Rate	Amount	Rate	Amount
Supply and Delivery of New Tyres & tubes for Corporation Vehicles including GST and Transportation charges etc, complete. as directed by the Departmental Officers.					
165 / D12 Tyre & Tube (TATA ACE)	35	3850.00	134750.00	4036.73	141285.38
215 / 75 - R15 Tubeless Tyre (Bolero Jeep)	10	7810.00	78100.00	8188.79	81887.85
235 / 60 - R18 Tubeless Tyre (XUV-700)	05	12940.00	64700.00	13567.59	67837.95
Total	**50**		**277550.00**		**291011.18 (+4.85%)more**
EMD (Rs. 5,600/-)				E Procurement Ref. No. 8291701712571, Date:15.08.2026	
After Negotiation -1					
165 / D12 Tyre & Tube (TATA ACE)	35	3850.00	134750.00	4004.00	140140.00
215 / 75 - R15 Tubeless Tyre (Bolero Jeep)	10	7810.00	78100.00	8122.40	81224.00
235 / 60 - R18 Tubeless Tyre (XUV-700)	05	12940.00	64700.00	13457.60	67288.00
Total	**50**		**277550.00**		**288652.00 (+4.00%)more**
After Negotiation -2					
165 / D12 Tyre & Tube (TATA ACE)	35	3850.00	134750.00	3927.00	137445.00
215 / 75 - R15 Tubeless Tyre (Bolero Jeep)	10	7810.00	78100.00	7966.20	79662.00
235 / 60 - R18 Tubeless Tyre (XUV-700)	05	12940.00	64700.00	13198.80	65994.00
Total	**50**		**277550.00**		**283101.00 (+2.00%)more**
After Negotiation -3					
165 / D12 Tyre & Tube (TATA ACE)	35	3850.00	134750.00	3850.00	134750.00
215 / 75 - R15 Tubeless Tyre (Bolero Jeep)	10	7810.00	78100.00	7810.00	78100.00
235 / 60 - R18 Tubeless Tyre (XUV-700)	05	12940.00	64700.00	12940.00	64700.00
Total	**50**		**277550.00**		**277550.00 (same)**

மேற்கண்ட வாகனங்களின் டயர்கள் தேய்ந்து பழுதடைந்து எந்த நேரத்திலும் பயன்படுத்த இயலாத நிலை உருவாகும் என்பதாலும் மற்றும் இந்த வாகனங்கள் தினசரி அலுவலக கள ஆய்வு மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருவதாலும் மாநகராட்சியின் அன்றாட பணிகளில் தொய்வு ஏற்படாவண்ணம் இருக்க புதிய டயர்கள் மற்றும் டியூப்கள் வாங்கி மேற்கண்ட வாகனங்களில் பொருத்தப்பட வேண்டிய அவசர அவசியம் கருதி மேற்கண்ட விபரப்படி M/s. Rising Tyres, Trichy நிறுவனத்தாரின் 3வது திருத்திய ஒப்பந்தப்புள்ளி விலை குறைப்பு சம்மத கடிதத்தில் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி விலை ரூ.2,77,550/– மதிப்பீட்டு தொகைக்கு சமமாக உள்ளதை கூர்ந்தாய்வு குழு பரிசீலனை செய்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று பணியினை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது,

அலுவலகக் குறிப்பு:

1. திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் தினசரி அலுவலக கள ஆய்வு மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பயன்படுத்தப்படும் இலகுரக வாகனங்களுக்கு தேவையான டயர்கள் மற்றும் டியூப்கள் – 50 எண்ணிக்கை, வழங்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழுவின் பரிந்துரையின்படி மதிப்பீட்டு தொகைக்கு சமமாக வழங்கியுள்ள **M/s. Rising Tyres, Trichy** நிறுவனத்தாரின் 3வது திருத்திய ஒப்பந்தப்புள்ளியை ஏற்று ரூ.2,77,550/–செலவில் பணியினை மேற்கொள்ள மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை 2026–2027ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இலகுரக வாகன பராமரிப்பு கணக்கு (வருவாய் நிதி) தலைப்பு எண் 2305301ல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.125.00 லட்சத்திலிருந்து மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

1970/2026/இ5(மையம்)

தீர்மானம் எண்.623 பொருள்: 3 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள்:4

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் மாநகர வார்டு பகுதிகளில் சேகரமாகும் தோட்டக்கழிவுகள் மற்றும் சாலையோர மழைநீர் வடிகால்களில் உள்ள மண்துகள்கள் அப்புறப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் இலகுரக டிப்பர் வாகனங்களை இயக்குவதற்கு தேவையான 66 எண்ணிக்கை ஓட்டுநர்கள் வெளி நிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் வழங்கும் பணி (இ5/633/2025(மை)) மற்றும் திடக்கழிவு மேலாண்மை, குடிநீர் விநியோகம், புதைவடிகால் பராமரிப்பு, ஆய்வுப் பணிகள் மற்றும் இதர பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் இலகுரக மற்றும் கனரக வாகனங்களை இயக்குவதற்கு தேவையான 76 எண்ணிக்கை ஓட்டுநர்கள் வெளி நிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் வழங்கும் பணி (இ5/632/2025(மை)) ஆகிய இரண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி பணிக்கு தொழிலாளர் வருங்கால வைப்புநிதி (EPF) உச்சவரம்பு தொகையான மாதம் ரூ.15000/-க்குண்டான 13% தொகை நாள் ஒன்றிற்கு ரூ.62.90 மட்டும் சேர்த்து மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்பொழுது தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம், புது டெல்லி அறிவிக்கை எண்.S.O.5109(E), நாள்:17.09.2026ன் படி தொழிலாளர் வருங்கால வைப்புநிதி (EPF) உச்சவரம்பு தொகை 25000/-ஆக உயர்த்தி அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வறிவிப்பு 17.09.2026 முதல் அமலுக்கு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட இரண்டு கோப்புகள் (இ5/633/2025(மை) மற்றும் இ5/632/2025(மை)) மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளில் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை உத்திரவு எண்.R.C.J3/759/2024, நாள்: 15.05.2024ல் நிர்ணயிக்கப்பட்ட ஓட்டுநருக்கான ஊதியம் நாள் ஒன்றிற்கு ரூ.772/- ஆகும். மாத ஊதியம் (ரூ,772 x 31 நாட்கள்) ரூ.23,932 ஆகும். தொழிலாளர் வருங்கால வைப்புநிதி (EPF) உச்சவரம்பு தொகை மாதம் ரூ.25000/-க்கு குறைவாக இருப்பதனால் ஓட்டுநருக்கான ஊதியம் நாள் ஒன்றிற்கு ரூ.772/-ற்கான EPF 13% தொகை நாள் ஒன்றிற்கு ரூ.100.36 என திருத்திய மதிப்பீடு செய்து 17.09.2026 முதல் பிரதி மாத பட்டியல் தொகை வழங்க அனுமதி வேண்டி மாமன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு சொந்தமான வாகனங்களை ஒப்பந்த அடிப்படையில் இயக்கி பணி மேற்கொள்ளப்பட்டு வரும் (இ5/633/2025(மை) மற்றும் இ5/632/2025(மை)) ஆகிய கோப்புகளில் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம், புது டெல்லி அறிவிக்கை எண்.S.O.5109(E), நாள்:17.09.2026ன் படி ஓட்டுநருக்கான ஊதியம் நாள் ஒன்றிற்கு ரூ.772/-ற்கான EPF 13% தொகை நாள் ஒன்றிற்கு ரூ.100.36 என திருத்திய மதிப்பீடு செய்து 17.09.2026 முதல் பிரதி மாத பட்டியல் தொகை வழங்க அனுமதி அளிக்கலாம்.
2. இப்பணிக்கான செலவீனத்தை 2026-27ம் ஆண்டு வருவாய் நிதி செலவீனங்கள் ஊதியம் தலைப்பில்- கூலி இதர இனத்திற்கு என்ற கணக்கு தலைப்பு எண்.2101010ல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையிலிருந்து மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

633/2025/இ5(மை)

தீர்மானம் எண்.624 பொருள்: 4 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள்:5

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் அம்ரூத் 2016-17 திட்டத்தின் கீழ், திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் (Phase II) செயல்படுத்துவதற்கு ரூ.377.29 கோடி மதிப்பீட்டில், 3 தொகுப்புகளாக பிரிக்கப்பட்டு, தொகுப்பு எண். 1,2 மற்றும் 3ல் பணிகள் அணைத்தும் முடிவடைந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படவுள்ளது. மேலும், தொகுப்பு எண்.1ல் மட்டும் இடைவெளி (Gap Works) பணிகள் மட்டும் நடைபெற்று வருகின்றன.

மேலும், புதிதாக சேர்க்கப்பட்ட பகுதிகள் (Phase III) பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்துவதற்கு, அம்ரூத் 2016-17 திட்டத்தின் கீழ், ரூ.330.31 கோடி மதிப்பீட்டில் 1 தொகுப்புகளாக பிரிக்கப்பட்டு, 94 % பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகள் 31.09.2026 க்குள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படவுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி மற்றும் சேவை கழகம், சென்னை (TNUIFSL) நிறுவனத்தால், இத்திட்டப் பணிகளை மேற்பார்வை செய்ய மெசர்ஸ்.ஷா டெக்னிக்கல் கன்சல்டன்ஸ் பிரைவேட் லிட், சென்னை நிறுவனத்தை திட்ட கலந்தறிதர்குரியராக (Project Management Consultancy 36 மாதம் வரையிலான காலத்திற்கு தொகை ரூ.8,25,64,554/– + GST முதல் க்குள் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்பத்திரம் நிறைவேற்றப்பட்டு, மேலும் 31.03.2025 வரை TNUIFSL நிறுவனத்தால், காலநீட்டிப்பு செய்யப்பட்டு, பணி மேற்கொள்ளப்பட்ட காலத்திற்குரிய தொகைகள் வழங்கப்பட்டுவிட்டது.

மேற்கண்ட திட்டப் பணிகளுக்கான மான்யம் மற்றும் கடன் முழுவதுமாக பெறப்பட்டு, செலவிடப்பட்டுள்ளது. எனவே மீதமுள்ள பகுதி 2 மற்றும் பகுதி 3ல் அடங்கும் பணிகளுக்கு ஏற்படும் செலவினத்தை இம்மாநகராட்சி பங்களிப்பு தொகையில் இருந்து செலவு செய்து கொள்ள TNUIFSL, சென்னை மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே பகுதி 2 மற்றும் பகுதி 3ல் அடங்கும் பணிகளை மேற்பார்வை செய்தல், அளவு புத்தகங்களில் அளவீடுகளை பதிவு செய்தல், வரைபடங்கள் தயார் செய்தல், அனைத்து பணிகளும் முடிவுற்றதும் சோதனை ஓட்டம் செய்தல், பணிமுடிவுறு அறிக்கை தயார் செய்து, நகரப்பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து ஒப்புதல் பெறுதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள, புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி கலந்ததறிதர்குரியர் நிறுவனத்தை தேர்வு செய்ய காலதாமதம் ஏற்பட வாய்ப்புள்ளதால், இத்திட்டப்பணியின் அவசர அவசியத்தை கருதி, ஏற்கனவே இப்பணி மேற்கொண்ட கலந்ததறிதர்குரியர் நிறுவனமான மெசர்ஸ்.ஷா டெக்னிக்கல் கன்சல்டன்ஸ் பிரைவேட் லிட், சென்னை நிறுவனத்தாரையே தொடர்ந்து, பணி அமர்த்தி கொள்ளவதற்கு மாமன்ற தீர்மானம் எண்.337 நாள்.30.05.2025 மற்றும் மாமன்ற தீர்மானம் எண்.272 நாள்.20.05.2026 ல் ஒப்புதல் அளித்துள்ளது,

இந்நிலையில், மெசர்ஸ்.ஷா டெக்னிக்கல் கன்சல்டன்ஸ் பிரைவேட் லிட், சென்னை நிறுவனம் தனது STC/CMSC/ 2026/5039 நாள்.31.07.2026ம் நாளைய கடிதத்தில் Phase II UGSS க்கு 01.04.2026 முதல் 31.07.2026 வரை மற்றும் Phase III UGSSக்கு 01.07.2026 முதல் 30.09.2026 வரை கீழ்க்கண்ட விலையில் இப்பணியினை மேற்கொள்ள சம்மதம் தெரிவித்துள்ளது.

Sl.No	Position	No of Months	No of Person	Salary Per Month in Rs	4 Months Expenditure in Rs
1	Construction Manager -Phase II	4	1	275000.00	11,00,000.00
2	Support Engineer/Phase II - 2 No	4	2	110000.00	880000.00
3	Construction Manager Phase III	3	1	275000.00	825000.00
4	Support Engineer/Phase III - 3 Nos	3	3	110000.00	990000.00
8	Office Manager / Cum Operator	3	1	45000.00	135000.00
	Sub Total (a)			**815000.00**	**3930000.00**

Sl.No	Position	Total MM	Per Month Exp in Rs	Over all Expenditure in Rs
1	Vehicle	3	50000.00	150000.00
2	Office Operations	3	50000.00	150000.00
	Sub Total (B)		100000.00	300000.00
	Total (a)+(b)		915000.00	4230000.00
	GST @ 18%			761400.00
	Grand Total			**4991400.00**

எனவே Phase II UGSS க்கு 01.04.2026 முதல் 31.07.2026 வரை (4 மாதங்கள்) மற்றும் Phase III UGSSக்கு 01.07.2026 முதல் 30.09.2026 வரை (3 மாதங்கள்) மெசர்ஸ்.ஷா டெக்னிக்கல் கன்சல்டன்ஸ் பிரைவேட் லிட், சென்னை கலந்ததறிதர்குரியராக பணி அமர்த்தி கொள்ளவும், ஒரு மாதத்திற்கு ரூ.915000/- வீதம் திட்ட பணிகளுக்கு ஆகும் தோரயா செலவினம் ரூ.4991400/- (சேவைவரி உட்பட) செலவு செய்து கொள்ள அனுமதி கோரி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு:-

1. ஒப்புதல் அளிக்கலாம்.
2. Phase II UGSS க்கு 01.04.2026 முதல் 31.07.2026 வரை (4 மாதங்கள்) மற்றும் Phase III UGSSக்கு 01.07.2026 முதல் 30.09.2026 வரை (3 மாதங்கள்) மெசர்ஸ்.ஷா டெக்னிக்கல் கன்சல்டன்ஸ் பிரைவேட் லிட், சென்னை கலந்ததறிதர்குரியராக பணி அமர்த்தி கொள்ளவும், ஒரு மாதத்திற்கு ரூ.915000/- வீதம் திட்ட பணிகளுக்கு ஆகும் தோரயா செலவினம் ரூ.4991400/- (சேவைவரி உட்பட) செலவு செய்து செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்.
3. மேற்கண்ட செலவினத்தை 2026-27ம் ஆண்டு வரவு செலவு திட்டம் **(2205202) பொறியியல் கலந்தறிதற்குரியர் கட்டணம்** என்ற தலைப்பின் கீழ் செலவு செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்.

இ7/4842 /2025 (மையம்)

தீர்மானம் எண்.625 பொருள்: 5 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள்: 6

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம் எண்.01. வார்டு எண் 15 க்குட்பட்ட ஓயாமாரி இடுக்காட்டில் நவீன எரிவாயு தகன மேடை (Gasifier Crematorium) இயங்கி வருகிறது. இங்கு தினசரி 6 முதல் 10 வரையிலான சடலங்கள் எரியூட்டப்பட்டு இறுதி சடங்குகள் செய்யப்பட்டு வருகிறது. இத்தகன மேடை-01 மற்றும் மேடை-02 ஆகியவை பழுதாகி தற்போது சடலங்கள் எரியூட்ட இயலாத நிலையில் உள்ளது. எனவே. தகன மேடையினை புதுப்பிக்கும் வகையில் 100Feet Ms chinney, Chimney Foundation மற்றும் இதர பணிகளை மேற்கொள்ளவது மிகவும் அவசியமாகிறது. எனவே, வார்டு எண்.15க்குட்பட்ட ஓயாமாரி இடுகாட்டிற்குள் அமைந்துள்ள எரிவாயு தகன மேடை (1 & II)ல் பழுதாகியுள்ள 100 Feet Ms chinney, Chimney Foundation மற்றும் இதர பணிகளை மாற்றம் செய்யும் பணியினை மதிப்பீடு ரூ.29.40 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு, மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி. தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் -1998, பிரிவு 57(7) இன் கீழ், மதிப்பீட்டின் விலையை விட 0.13 சதவீதம் குறைவான விலை விகிதத்தில், விலைப்புள்ளி வழங்கிய திரு.எம்.பாபுராஜ், திருச்சி ஒப்பந்தக்காரர் மூலம் பணிகள் மேற்கொள்ள மாமன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

இ2/8834/2026(மையம்)

தீர்மானம் எண்.626 பொருள்: 6 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

பொருள்:7

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டுகுழு அலுவலகம் 2 க்கு உட்பட்ட இ.பி ரோடு பகுதியில் அமைந்துள்ள கனரக சரக்கு வாகன நிறுத்த முனையம் மற்றும் முனையத்தினுள் கட்டப்பட்டுள்ள சிறிய உணவகம், தரைத்தளம் உடன் முதல் தளத்துடன் கூடிய வியாபார அலுவலகம், 4 எண்ணிக்கை கடைகள், நகரப் பொலிவாக்குதல் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு கடந்த 2023ஆம் ஆண்டில் செயல்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டது. இதில் தரைத்தளம் உடன் முதல் தளம் கொண்ட வியாபார அலுவலகத்திற்கு 15 தடவைகளுக்கு மேலாக ஏலம்/ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டும் இதுநாள் வரை எவரும் ஏலம்/ஒப்பந்தப்புள்ளிகள் கோரி எடுக்கப்படாமல் இருந்து வருகிறது. மேலும் நான்கு கடைகளில், கடை எண் 1 ஐ 2022-2023, 2023-2024 மற்றும் 2024-2025 ஆகிய மூன்றாண்டுகளுக்கு குத்தகைக்கு திரு.து.மனோஜ் என்பவருக்கு உயர்ந்த பட்ச மாத வாடகைத் தொகை ரூ.12,000/-க்கு மாமன்ற தீர்மானம் எண் 192 நாள் 29.3.32023ன்படி அங்கீகரிக்கப்பட்டு வழங்கப்பட்டது. இக்கடையை 2025-2026 மூன்றாண்டுகள் முடிந்த நிலையில் மார்ச் 2026 வரை நிலுவையின்றி வாடகைத் தொகையை செலுத்தியதுடன் கடையை ஒப்படைப்பதாக தனது 30.03.2026ந் தேதிய கடிதத்தில் தெரிவித்து, கடையை ஒப்படைப்பு செய்துள்ளார்.

இக்கடைக்காக செலுத்திய முன் வைப்புத் தொகை ரூ.2,00,000/- மற்றும் கூடுதல்வைப்புத் தொகை ரூ.36,000/-ஐயும் திரும்ப வழங்க கோரியுள்ளார். எனவே இக்குத்தகை இனத்திற்கு ஏற்படுத்தப்பட்ட குத்தகை ஒப்பந்தத்தை 1.4.2026 முதல் ரத்து செய்வதற்கும் இவ்வினத்திற்கு 2026-2027ஆம் ஆண்டிற்கு பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள வாடகை தொகையை நீக்கம் செய்வதற்கும் தனியரது வைப்புத் தொகைகளை திரும்ப வழங்குவதற்கும் மேலும் இக்கடைக்கு மறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளிகள் கோர மாமன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேலும் கடை எண் 4க்கு திரு.சதீஸ்குமார் என்பவருக்கு உயர்ந்த பட்ச மாத வாடகைத் தொகை ரூ.13,500/-க்கு மாமன்ற தீர்மானம் எண் 193 நாள் 29.3.2023ன்படி அங்கீகரிக்கப்பட்டு பல தடவைகள் கூடுதல் வைப்புத் தொகை செலுத்த தெரிவித்தும் இதுநாள் வரை செலுத்தாமலும் ஒப்பந்தப் பத்திரமும் சமர்பிக்கவில்லை. எனவே மாநகராட்சி குத்தகை விதிப்படி இவரது ஒப்பந்தத்தை ரத்து செய்வதுடன் தனியர் செலுத்தியிருந்த முன்வைப்புத் தொகையையும் பறிமுதல் செய்யலாம். இவ்வினத்திற்கு மறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளிகள் கோர அனுமதி வேண்டப்படுகிறது.

இதேபோல் வாகன நிறுத்த முனையத்தினுள் கட்டப்பட்டுள்ள சிறிய உணவகத்திற்கு கடந்த 22.2.2024 அன்று ஏலம்/ஒப்பந்தபுள்ளிகள் கோரியதில் திருமதி.எம்.குமாரி என்பவர் கொடுத்திருந்த ஒப்பந்தப்புள்ளியை மாமன்றத் தீர்மானம் எண்.261 நாள்13.03.2024ன்படி அங்கீகரிக்கப்பட்டு பல தடவைகள் கூடுதல் வைப்புத் தொகை செலுத்த தெரிவித்தும் இதுநாள் வரை செலுத்தாமலும் ஒப்பந்தப் பத்திரமும் சமர்பிக்கவில்லை. எனவே மாநகராட்சி குத்தகை விதிப்படி இவரது ஒப்பந்தத்தை ரத்து செய்வதுடன் தனியர் செலுத்தியிருந்த முன்வைப்புத் தொகையையும் பறிமுதல் செய்யலாம்.இவ்வினத்திற்கு மறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளிகள் கோர மாமன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. கடை எண் 1க்கு குத்தகைதாரராக இருந்து வந்த திரு.து.மனோஜ் என்பவரது முன்வைப்புத் தொகை ரூ.2,00,000/-ஐ திரும்ப வழங்கலாம். இக்கடைக்கு மறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளிகள் கோரலாம்.
2. கடை எண் 4க்கு ஏலம்/ஒப்பந்தபுள்ளியில் கலந்து கொண்டு அதிகபட்ச வாடகை தொகை கோரிய திரு.சதீஸ்குமார் என்பவர் கடந்த இரண்டு வருடங்களாக கூடுதல் வைப்புத் தொகை உடன் ஒப்பந்தப்பத்திரம் கொடுக்காமல் இருந்து வந்ததால் அவரது முன் வைப்புத் தொகையை பறிமுதல் செய்து மாநகராட்சி கணக்கில் வரவில் வைக்கலாம். இக்கடைக்கு மறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளிகள் கோரலாம்.
3. கனரக வாகன நிறுத்த முனையத்தினுள் உள்ள சிறிய உணவகத்திற்கு ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் கலந்த்து கொண்டு அதிக பட்ச வாடகை தொகை கோரிய திருமதி எம்.குமாரி என்பவர் கூடுதல் வைப்புத் தொகை உடன் ஒப்பந்தப்பத்திரம் கொடுக்காமல் இருந்து வந்ததால் அவரது முன் வைப்புத் தொகையை பறிமுதல் செய்து மாநகராட்சி கணக்கில் வரவில் வைக்கலாம்.
4. வியாபார அலுவலகம் மற்றும் உணவகம் ஆகிய இனங்களுக்கு மறுஏலம் / ஒப்பந்தப்புள்ளிகள் கோர அனுமதி அளிக்கலாம். அதற்கான விளம்பர செலவீனங்களுக்கும் அனுமதி வழங்கலாம்.
5. ஒப்பந்த விதிகளின்படி திரு.மனோஜ் குத்தகைதாரர் ஒப்படைப்பு செய்வதற்கு 3 மாதங்களுக்கு முன்பே அறிவித்துக் கொள்ளாததால் கூடுதல் வைப்புத்தொகை ரூ. 36,000/-ஐ பிடித்தம் செய்யலாம்.

அ1 (வா.கு.அ-2) / 4870 / 2023

தீர்மானம் எண்.627 பொருள்: 7 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள்:8

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டுகுழு அலுவலகம் 2க்கு உட்பட்ட மூன்றாண்டு குத்தகை இனங்கள் (2025–2026,2026–2027 மற்றும் 2027–2028) அனைத்துக்கும் மாமன்றதீர்மானம் எண்.996 நாள். 30.12.2024ல் அங்கீகரிக்கப்பட்டு ஏலம்/ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது.

இதன்படி குத்தகை இனம் எண்.5 காந்தி சந்தைக்கு பின்புறம் கீழரண்சாலைக்கும், கிருஷ்ணாபுரம் சாலைக்கும் இடையில் ஆட்டுச் சந்தையை ஒட்டி அமையப் பெற்றுள்ள ஆடு அடிக்கும் இடத்தில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமத்திற்கான ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு 2025–2026, 2026–2027 மற்றும் 2027–2028 முடிய மூன்றாண்டுகளுக்கு கடந்த 26.2.2025ம் ஆண்டில் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு உட்சபட்ச கேள்வித் தொகையாக ஒப்பந்தப்புள்ளி கோரிய திண்டுக்கல் மாவட்டம், திரு.டி.ராஜா என்ற நபருக்கு மாமன்றத் தீர்மானம் எண் 127 நாள் 28.03.2025ன் உத்தரவின்படி 01.04.2025 முதல் மூன்றாண்டுக் குத்தகை உரிமம் வழங்கப்பட்டது.2025–2026ம் முதலாண்டு குத்தகை நிறைவுறும் நிலையில் 'குத்தகைதாரரால் செலுத்தப்பட வேண்டிய குத்தகைத் தொகையை ரூ.37,37,000/–ஐ செலுத்திவிட்டார்.

இந்நிலையில், மாநகராட்சி ஆடுஅடிக்கும் இடத்திற்கு தினந்தோறும் குறைவான அளவிலான ஆடுகளை அறுக்க கொண்டு வருவதாகவும், மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் அதிகளவில் இருக்கும் ஆட்டுக்கறிக் கடைகளில் அவர்களாகவே ஆடு அறுத்து விற்பனை செய்வதால் மாநகராட்சி ஆடு அறுக்கும் கூடத்திற்கு வந்து ஆடு அறுத்த எடுத்து செல்ல வருவதில்லை எனவும் தனக்கு போதிய வருமானம் கிடைப்பதில்லை எனவும் அதிகளவில் நட்டம் ஏற்பட்டுவிட்டது என தெரிவித்து வந்தார். மேலும் இந்த 'குத்தகையை தொடர்ந்து நடத்தி வந்த நிலையில் 15 ஆகஸ்ட் 2026 முதல் தன்னால் நடத்த இயலவில்லை என ஒப்பந்தத்தை கைவிட்டுச் சென்றுவிட்டார். அன்று முதல் மாநகராட்சி பணியாளர் ஒருவரை ஆடு அடிக்கும் இடத்திற்கான கட்டணத்தை வசூல் செய்ய பணியமர்த்தப்பட்டு மாநகராட்சி மூலம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. இதற்கான கட்டண ரசீதுகளை அச்சடித்து பெற்றுக் கொள்ளப்பட்டதற்கு அனுமதி கோரப்படுகிறது.

அவசர அவசியம் கருதி இந்த இனத்திற்கு ஏலம் /ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு கடந்த 28.8.2026 அன்று ஏலம்/ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிள் மட்டும் வரப்பெற்றன. ஏலத்தில் எவரும் கலந்துகொள்ளவில்லை.

வ. எண்.	குத்தகைதாரரின் பெயர் மற்றும் முகவரி	ஏலம் / ஒப்பந்தப்புள்ளி முன் வைப்புத் தொகை ரூ.	2025–26ஆம் ஆண்டு குத்தகை தொகை விவரம்	ஏலத்தில் கலந்து கொண்டு கோரிய உயர்ந்தபட்ச தொகை ரூ.	ஒப்பந்தப் புள்ளியில் கலந்து கொண்டு கோரிய தொகை ரூ.	குறிப்பு
1	ஆர்.ராஜலட்சுமி/ க/பெ ராஜகுமார் க.எண்.97–34ஏ/63–77, வி.எம்.பேட்டை, எடத்தெரு ரோடு பாலக்கரை, திருச்சி 8	ரூ.10,00,000/– D.D. NO.180329 நாள். 25.08.2026 ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா சீனிவாசநகர் திருச்சி	37,37,000/–	–	மாதம் ஒன்றுக்கு 3,11,100/–	நடைபெற்ற ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் ஏலத்தில் எவரும் கலந்து கொள்ள வில்லை ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு நபர்கள் மட்டும் கலந்து கொண்டுள்ளனர். ஒப்பந்தப் புள்ளியில் உயர்ந்த பட்ச குத்தகை தொகையாக மாதம் ஒன்றுக்கு ரூ.3,11,100/– என்ற தொகை திருமதி. ஆர். ராஜலட்சுமி என்பவர் குறிப்பிட்டுள்ளார். இந்த மூன்றாண்டுக் குத்தகையில் கடந்த 2025–2026ம் ஆண்டின் குத்தகைத் தொகையாக கோரப்பட்ட ரூ.37,37,000/–க்கு 5 சதவீத ஆண்டு உயர்வு தொகை ரூ.1,86,850/–ஐ சேர்த்து 39,23,850/– என்பது 2026–2027ஆம் ஆண்டுக்கு நிர்ணயம் செய்யப்படும் தொகை ஆகும். ஆனால் தற்போது செப்டம்பர் 2026 முதல் மார்ச் 2026 முடிய உள்ள 7 மாத காலத்திற்கு ஏலம் கோரப்பட்டுள்ள
	பெ. ஜெயலெட்சுமி / தமிழ்ச்செல்வம் எண்.2 /37, குடித்தெரு, மேலப்பட்டி, கோப்பு அஞ்சல் குளித்தலை தாலுகா	வைப்புத் தொகை செலுத்தவில்லை		–	மாதம் ஒன்றுக்கு ரூ.3,,11,000/–	

வ. எண்.	குத்தகைதாரரின் பெயர் மற்றும் முகவரி	ஏலம் / ஒப்பந்தப்புள்ளி முன் வைப்புத் தொகை ரூ.	2025–26ஆம் ஆண்டு குத்தகை தொகை விவரம்	ஏலத்தில் கலந்து கொண்டு கோரிய உயர்ந்தபட்ச தொகை ரூ.	ஒப்பந்தப் புள்ளியில் கலந்து கொண்டு கோரிய தொகை ரூ.	குறிப்பு
						மாத வாடகைத் தொகை ரூ. 3,11,100/– என்பது மாநகராட்சியின் 2026–27 ஆம் ஆண்டின் மாத வாடகை தொகையாக வரும் ரூ.3,26,988/–ஐ விட ரூ.15,888/–குறைவாக உள்ளது. இந்த தொகையானது 7 மாதங்களில் 1,11,216/–குறைவாக உள்ளது. மேற்படி தொகை குறைவாக இருந்தாலும் மாநகராட்சியால் இந்த இனத்தை கையகப்படுத்தி வசூல் செய்ய போதிய பணியாளர்கள் இல்லாமல் உள்ளதாலும்வெளிப்பணியாளர்கள் இரண்டு பேரை பணியமர்த்த குறைந்தபட்சம் மாதம் ஒன்றுக்கு 15,000/–வீதம் ஊதியம் வழங்கினால் ஆண்டுக்கு ரூ.3,60,000/–செலவாகும். மேலும் கட்டண ரசீதுகள் அச்சடிக்கும் செலவினம் கூடுதலாகும். மாநகராட்சியின் குத்தகைத் தொகை அதிகமாக உள்ளதாக குத்தகைதாரரால் தெரிவிக்கப்பட்டு குத்தகை இனங்கள் நடுவிலேயே கைவிடப்பட்டு வருவதை தவிர்க்கவும் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்தபட்ச குத்தகை தொகை கோரிய திருமதி.ராஜலெட்சுமி என்பவருக்கு இவ்வினத்தினை ஒப்படைப்பு செய்ய மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

மேற்கண்ட பட்டியலில் கலம் எண்.7ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறும், அரசாணை (நிலை) எண்.78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.) துறை நாள். 25.05.09ன்படியும் இவ்வினத்திற்கு உயர்ந்தபட்ச குத்தகை தொகையினை கோரிய திருமதி.ராஜலெட்சுமி என்பவருக்கு ஒப்படைப்பு செய்திட மான்றத்தின் அனுமதிக்குப் பொருள் வைக்கப்படுகிறது. இக்குத்தகை இனத்திற்கு 2025–2026ஆம் ஆண்டு குத்தகை நடத்திவந்த திரு.ராஜா என்பவர் வைப்புத் தொகையாக செலுத்தியிருந்த ரூ.2,00,000/–ஐ பறிமுதல் செய்து மாநகராட்சி கணக்கில் வரவு வைக்கலாம். இக்குத்தகைதாரரை மாநகராட்சியில் இனி வருங்காலங்களில் எந்த குத்தகையினத்திலும் கலந்துகொள்ள முடியாத வகையில் கருப்புப் பட்டியலில் சேர்த்து அறிவிக்கலாம். இவ்வினத்திற்கு அவசர அவசியம் கருதி ஏலம்/ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதற்கும் விளம்பர செலவினங்களுக்கும் அனுமதி அளிக்கலாம். 2026–2027ல் 01.10.2026 முதல் 31.03.2027 வரையும் 2027–2028ம் ஆண்டு குத்தகைக்கும் தொடர அனுமதி அளிக்கலாம். மேலும் GST 18% சேர்த்து வசூல் செய்யவும் அனுமதிக்கலாம்.

இந்த இனத்திற்கு 1.4.2025 முதல் 31.3.2028 வரையிலான மூன்றாண்டுக் குத்தகை உரிம இனங்களுக்கான ஏல விபர அறிக்கை(மாமன்றத் தீர்மானம் 966 நாள் 30.12.2024)யில் அங்கீகரிக்கப்பட்ட குத்தகை வைப்புத் தொகை ரூ. 2,00,000/–என்ற மிக குறைவான தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால் நிதி ஸ்திரத்தன்மையற்ற எவர் ஒருவரும் சுலபமாக ஏலம்/ஒப்பந்தப்புள்ளிகள் கோரும் சூழ்நிலை ஏற்படுகிறது. திடீரென குத்தகையை இடைநிறுத்தம் செய்வதற்கு ஏதுவாக அமைந்தும் மாநகராட்சியால் குத்தகைதாரர் செலுத்தப்பட வேண்டிய தொகைகளை பிடித்தம் செய்ய இயலாமல் போகிறது. இவ்வினத்திற்கு மிகப் பெரிய அளவில் குத்தகை தொகை ஏலம் போவதால் தற்போது நடத்தப்பட்ட ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் முன்வைப்புத் தொகையாக ரூ.10,00,000/–என நிர்ணயம் செய்ததற்கும் இனி வரும் காலம் முதல் அவ்வாறே தொடரவும் அனுமதி அளிக்கலாம்.

அ1 (வா.கு.அ–2) / 716 / 2025

தீர்மானம் எண்.628 பொருள்: 8 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள்:9

இம்மாநகராட்சி வார்டுகுழு அலுவலகம்–2க்குப்பட்ட காந்தி சந்தை பின்புறத்தில் உள்ள கீழரண் சாலையில் சீர்மிகு நகரத்திட்டத்தின்கீழ் புதிதாக கட்டப்பட்ட மீன் மற்றும் இறைச்சி அங்காடியில் முதல் தளத்தில் கடை எண்.1 முதல் 74 வரை காலியாக உள்ள கடைகளுக்கு மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி ஏல அறிவிப்பு தினசரி செய்திதாளில் 10.08.2026 அன்று விளம்பரம் செய்யப்பட்டும் அனைத்து வார்டுகுழு அலுவலகங்கள் மற்றும் மைய அலுவலகம் விளம்பர பலகைகளில் விளம்பரபடுத்தப்பட்டும் 28.08.2026 அன்று மறுஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்களின் விவரம் கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு

ஒப்புநோக்கு பட்டியல்

வ. எ.	ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்களின் பெயர் மற்றும் முகவரி (திருவாளர்கள்)	வைப்பு தொகை மற்றும் வங்கி வரைவோலை விவரம்	அரசு நிர்ணயம் செய்த மாத வாடகை தொகை (ரூ)	ஏலத்தில் கோரப்பட்ட உயர்ந்தபட்ச வாடகை தொகை (ரூ)	ஒப்பந்தப் புள்ளியில் கோரப்பட்ட வாடகை தொகை (ரூ)	குறிப்பு
1	2	3	4	5	6	7
கடை எண். 35 முதல் தளம்						
1	முகமதலி ஜின்னா / T.K. முகமது ஷரிப், 6/68, வரிசை ராவுத்தர் சந்து, தஞ்சை ரோடு, திருச்சி– 8	ரூ.1,00,000/– வ.வோ.எ. 385361 இந்தியன் வங்கி நாள்.27.08.26	ரூ.4900/– (63.81 ச.அ x 75.63)		4917/– (மாதத்திற்கு)	நடைபெற்ற ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு நபர்கள் கலந்து கொண்டதில் ஏலத்தின் உயர்ந்த பட்ச மாத வாடகையாக ரூ.4917/– (முதல் தளம் கடை எண்.35) திரு. முகமதலி ஜின்னா / T.K.முஹமது ஷரீப் என்பவரும் ஒப்பந்தபுள்ளியில் உயர்ந்த பட்ச மாத வாடகையாக ரூ.5000/– (முதல் தளம் கடை எண்.35) திரு. M.அக்பர் அலி / T.K.முஹமது ஷரீப் என்பவர் மாத வாடகை கோரியுள்ளார் எனவே, ஒப்பந்தப்புள்ளில் உயர்ந்த பட்ச மாத வாடகை கோரிய திரு. M.அக்பர் அலி / T.K.முஹமது ஷரீப் என்பவருக்கு கடையினை ஒதுக்கீடு செய்வது குறித்து மாமன்றத்தில் அனுமதி கோரி பொருள் வைக்கப்படுகிறது.
2	M.அக்பர் அலி/ T.K.முஹமது ஷரீப் 6/68 வரிசை ராவுத்தர் சந்து தஞ்சைரோடு திருச்சி–8	ரூ.1,00,000/– வ.வோ.எ. 385362 இந்தியன் வங்கி நாள்.27.08.26			5000/– (மாதத்திற்கு)	

மேற்கண்ட பட்டியலில் கலம் எண்.7ல் கண்டுள்ள காரணங்களை முன்னிட்டும், ஒப்படைப்பு செய்திடவும் 12 மாத தொகையினை கூடுதல் வைப்பு தொகை மற்றும் வாடகை ஒப்பந்த பத்திரம் பெற்று உயர்ந்த பட்ச தொகை கோரியவர்களுக்கு மாத வாடகை அடிப்படையிர் 3 (மூன்று) வருட காலத்திற்கு குத்தகை இனத்தினை ஒப்படைப்பு செய்திடவும் மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு:–

1. மேற்கண்டுள்ள பட்டியலில் கலம் எண்.7ல் கண்டுள்ள காரணங்களை முன்னிட்டும், அரசாணை (நிலை) எண்.78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை நாள்.25.05.2009ல் தெரிவித்துள்ளவாறும் முதல்தளம் கடை எண்.35ஐ திரு.M.அக்பர் அலி என்பவருக்கு ஒப்படைப்பு செய்யலாம். இவரது ஒப்பந்தபுள்ளியில் அரசு நிர்ணய விலையை காட்டிலும் ரூ.1100/– அதிகம் என்பதால் மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.மாத வாடகையுடன் GST18% சேர்த்து வசூல் செய்ய அனுமதிக்கலாம்.
2. கூடுதல் முன்வைப்பு தொகை 12 மாத வாடகையினையும் மற்றும் வாடகை ஒப்பந்தபத்திரத்தினையும் பெற்று உயர்ந்தபட்ச தொகை கோரியவர்களுக்கு மாத வாடகை அடிப்படையில் 3 வருட காலத்திற்கு குத்தகை இனத்தினை ஒப்படைப்பு செய்யலாம்.
3. ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகளில் கலந்து கொண்ட இதர ஒப்பந்ததாரர்களிடமிருந்து பெறப்பட்ட ஏல முன் வைப்புத் தொகையினை மீள வழங்கிட அனுமதிக்கலாம்.
4. ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்படாத முதல் தளத்திலுள்ள 74 கடைகளுக்கு மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான விளம்பர செலவினத்தை வழங்கிடவும் அனுமதி வழங்கலாம்.

அ1 (வா.கு.அ–2) / 2228 / 2023

தீர்மானம் எண்.629 பொருள்: 9 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

மேயர்
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி